


ராஷ்டிர கூடர்களின் பேரரசு

***ராஷ்டிரகூடர்களின் பங்களிப்புகள் :*** *அரச உரிமை ராஷ்டிரகூடர்களிடையே மன்னர் பதவி பரம்பரை உரிமையானது. அரசருக்கு உதவ அமைச்சர்கள் அடங்கிய குழு இருந்தது. அயல்நாட்டு துறையை கண்காணிக்க அமைச்சரவையிலுள்ள சிறப்பு வாய்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் மகாசந்திவிக்ரகி* (Mahasandhivigrahi) *எனப்பட்டார். நிர்வாக திறமைக்காகவும் வசதிக்காகவும் அரசு ராஷ்டிரா (மண்டலம்) விஷ்யா, நாடு மற்றும் கிராமம் போன்ற பல பிரி வுகளாகப் பிரிக்கப்பட்டன.*

*கிராமத்தலைவர் கிராமபதி அல்லது பிரபுகவுண்டர் என அழைக்கப்பட்டார். அவர் கிராமத்தின் படைத்தலைவராகவும் விளங்கினார். அவருக்கு கிராம கணக்காய்வாளர் உதவினார். அங்கு கிராம சபையும் இருந்தது.*

*நாடுபகுதியை நாடுகவுண்டர் கண்காணித்தார். அதைப் போலவே விஷயா மற்றும் ராஷ்டிராப்பகுதிகளிலும் அதிகாரிகள் இருந்தனர். விஷயபதி விஷயாவின் (மாவட்டம்) அதிகாரியாவார். ராஷ்டிரப்பதி ராஷ்டிராவின் அதிகாரியாக விளங்கினார்.*

*நிலவரி, பொருள்வரி, வீட்டுவரி, கடைகள்வரி மற்றும் தொழில்வரி போன்றவை முக்கியமான வருவாயாகும். அயல் நாட்டு வாணிகம் அரசுக்கு அதிகமான வருவாயைத் தந்தது.*


©KTBS Not to be republished

ஒவ்வொரு ஆண்டும் ஹம்பியிலுள்ள கன்னடபல்கலை கழகம் கர்நாடகாவில் சிறந்த சாதனைப்புரிந்த முதுவர்களுக்கு முதல் கன்னடகவியான பம்பாவின் நினைவாக நடோஜா என்ற பட்டதை வழங்கி சிறப்பித்துவருகிறது.

ராஷ்டிரகூடர்கள் கன்னடம் மற்றும் சம்ஸ்கிருதம் ஆகிய இருமொழிகளையும் ஆதரித்தனர். சமஸ்கிருத்ததில் வெகுநேர்த்தியான படைப்புகள் எழுதப்பட்டன. திரிவிக்ரமா என்பவர் நலச்சம்பு என்ற நூலை எழுதினார். வாலாயுதா என்பவர் கவிராசியா என்ற நூலை எழுதினார். ஜினசேனா, கணிதமேதை மகாவீர ஆச்சாரியா இலக்கணப்புலவர் ஷாகாதாயானா, குணப்பத்திரா மற்றும் வீரசேனா போன்றோர் அமோகவர்ஷரின் அவைக்கள மேதைகளாவர். முதல் கவி பம்பா ஆதிபுராணா என்ற நூலை கன்னடத்தில் எழுதினார். இது விக்ரமார்ஜுனாவின் வெற்றியைப்பற்றி குறிப்பிடுகிறது. கவிச்சக்ரவர்த்தி பொன்னா சாந்தி புராணம் என்னும் நூலை எழுதினார். அமோகவர்ஷரின் அவையிலிருந்த ஸ்ரீவிஜயா கவிராஜ மார்கம் என்ற நூலை எழுதினார். இது கன்னடத்தில் மிகச்சிறப்பான காவியமாகும். இவைகளெல்லாம், பழங்காலத்திலிருந்தே எவ்வாறு கன்னட இலக்கியங்கள் பெருகியிருக்கின்றன என்பதை தெளிவுப்படுத்துகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஹம்பி கன்னட பல்கலைக் கழகம் கர்நாடகாவில் கன்னட அருஞ்சாதனையாளருக்கு ஆதிகவி பம்பா நினைவாக 'நாடோஜா' என்ற விருதை வழங்கி சிறப்பிக்கிறது.

ராஷ்டிரக்கூடர்களின் ஆட்சிகாலத்தில் எழுதப்பட்ட சிறப்புக்குரிய உரைநடை படைப்பு வட்டாராதனே (Vaddaradhane) ஆகும். இதன் ஆசிரியர் சிவகோட்டாச்சாரியா ஆவார். இது சமண சமய கதைகளின் தொகுப்பு ஆகும். வட்டார கன்னட மொழிவழக்கில் எழுதப்பட்டது இதனுடைய தனிசிறப்பாகும். அதிலுள்ள இடங்களின் அமைப்பு, பாத்திரப்படைப்புகளின் தன்மை மற்றும் உரையாடல்கள் மிகச்சிறப்பாக உள்ளன. இது பம்பா காலத்திற்கும் முற்பட்ட மிகப்பெரிய உரை நடை படைப்பாகும். கன்னட இலக்கிய வரலாற்றில் இது அழியாப்புகழை பெற்றுவிளங்குகிறது.



நடோஜா பம்பா

அக்காலத்தில் அக்ரகாரங்ளும் மடங்களும் மிகச்சிறந்த கல்வி மையங்களாக விளங்கின. அங்கு சமஸ்கிருதம், வேதங்கள், சோதிடம் மற்றும் புராணங்கள் போன்ற பாடங்கள் நடத்தப்பட்டன. இண்டி தாலுக்காவிலுள்ள சலோட்ஜி என்னும் இடம் ஒரு மாபெரும் கல்வி மையமாகும்.

ராஷ்டிரகூட மன்னர்கள் சிவன் மற்றும் விஷ்ணு பக்தர்களாவர். எனவே, அவர்கள் பல சிவா மற்றும் விஷ்ணு கோயில்களை கட்டியெழுப்பினர். சமணமதம் அரசு மதமாக

©KTBS Not to be republished

*உருவெடுத்து எல்லா இடங்களிலும் பரவியது. இருந்தாலும் பிற மதங்களும் ஆதரிக்கப்பட்டன.*

*ராஷ்டிரகூட அரசர்கள் கலையின் புரவலர்களாக இருந்தனர். இந்திய கலைக்கு அவர்கள் வழங்கிய பங்களிப்புகளை கல்லில் செதுக்கப்பட்ட எல்லோரா மற்றும் எலிபெண்டா கோவில்களில் காணலாம். எல்லோராவில் முதலாம் கிருஷ்ணர் ஒரே கல்லில் கட்டிய கைலாச நாதர் கோயில் மிகவும் வியக்கத்தக்க ஒன்றாகும். இக்கோயில் **100** அடி உயரமும் **276** அடி நீளமும் **154** அடி அகலமும் கொண்ட ஒரே பாறையிலிருந்து செதுக்கப்பட்டதாகும். அதன் அருகில் புகழ்வாய்ந்த தச வட்டாரா குகை கோயிலும் உள்ளது. மும்பைக்கு அருகிலுள்ள எலிபெண்டா குகையில் உள்ள சிற்பங்கள் ராஷ்டிரக்கூடர்களின் சிற்பகலையில் ஒரு மைல் கல்லாகும். அர்த்தநாரீஸ்வரர் மற்றும் திருமூர்த்தி (மூன்றுமுகமுடைய) சிலைகள் மிகவும் கலைநய நுணுக்கமிக்க ராஷ்டிரகூடர்களின் எழிலோடு செதுக்கப்பட்டுள்ளன. கோயில்கள் ராய்ச்சூர் மாவட்டத்திலுள்ள ஷிராவால் என்னுமிடத்தில் உள்ளன. பட்டதக்கல்லு என்ற இடத்தில் ஒரு அழகுவாய்ந்த சமண கோயிலும் உள்ளன.*



*கைலாச நாதர் கோயில் - எல்லோரா*

## *கல்யாண சாளுக்கியர்கள் (கி.பி. 973 - 1189)*

*இந்திய வரலாற்றில் கல்யாண சாளுக்கியர்களின் ஆட்சிக்காலம் பெருமிதத்துக்குரிய காலக்கட்டமாகும். அவர்கள் கலை, இலக்கியம் மற்றும் கல்விபோன்றவற்றிற்கு சிறப்பான ஆதரவை நல்கினர். அவர்கள் கன்னடம் மற்றும் சமஸ்கிருத மொழிகளின் வளர்ச்சிக்கு இதயம் நிறைந்த வாய்ப்புகளை உருவாக்கினர். அவர்கள் புகழ்வாய்ந்த கன்னட கவிஞர்களான துர்கசிம்ஹா, ரன்னா, நாகச்சந்திரா இன்னும் பலருக்கும் புரவலர்களாக விளங்கினர். இக்காலக்கட்டத்தில் தான் வசன இலக்கியங்கள் தோன்றின. சாளுக்கியர்களின் புதிய கல்யாண நகரத்தை கட்டியெழுப்பி அதை தலைநகராக்கிய பெருமை முதலாம் சோமேஸ்வரரைச் சாரும்.*

Not to be Republished

ராஷ்டிரகூடர்களுக்கு கப்பங்கட்டிவந்த இரண்டாம் தைலப்பா ராஷ்டிரா கூடர்களின் மன்னர் இரண்டாம் கார்காவை தோற்கடித்து மான்யகேதாவை கைப்பற்றியும் கல்யாண் சாளுக்கிய அரசை ஏற்படுத்தினார். இவர் ஏறத்தாழ 24 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவ்வம்சத்தின் முக்கியமான அரசர்களுள் முதலாம் சோமேஸ்வரர் ஆவார். அவர் கல்யாண் என்ற புதிய நகரத்தை உருவாக்கி அதை தலைநகராகவும் மாற் றினார். இதுவே பீதர் மாவட்டத்திலுள்ள இன்றைய பசவகல்யாண் ஆகும். முதலாம் சோமேஸ்வரர் பல போர்களில் ஈடுபட்டாலும் தன் ஆட்சிப்பகுதியின் எல்லைகுறுகாமலிருக்க சிறந்த கவனத்தை மேற்கொண்டார். அவர் சோழமன்னரை குப்பம் (Koppam) என்ற இடத்தில் தோற்கடித்தார்.

இவ்வம்சத்தின் மிகவும் புகழ்வாய்ந்த அரசர் முதலாம் சோமேஷ்வரரின் மகனான ஆறாம் விக்ரமாதித்தியர் ஆவார். அவர் ஒரு சிறந்த வீரத்துடன் கூடிய வீரர் மற்றும் சிறப்பான ஆட்சியாளர் ஆவார். அவர் கி.பி. 1076 ல் சாளுக்கிய விக்ரம காலப்பகுதியை தோற்றுவித்தார். அவர் ஒய்சளா மன்னர் விஷ்ணுவர்த்தனரின் புரட்சியை ஒடுக்கினார். அவர் இலங்கைமன்னர் விஜயபாகு உடன் நல்லுறவை கொண்டிருந்தார்.

ஆறாம் விக்கிரமாதித்தியர் மற்றும் இரண்டாம் சோமேஸ்வரர் ஆகியோர்களின் ஆட்சிகாலத்தில் சாளுக்கியர் அரசு சரியத்தொடங்கியது. நான்காம் சோமேஸ்வரர் ஆட்சிகாலத்தில் அது மிகவும் பலவீனமானதால் களச்சூரி பிஜ்ஜலா என்பவர் கல்யாணை கைப்பற்றி ஆளத்தொடங்கினார். இக்கால கட்டத்தில்தான் சமூக புரட்சியாளர் ஸ்ரீ ஜெகத்சோதி (உலகச்சுடர்) பசவண்ணர் தோன்றினர். அவர் லிங்காயத் (Lingayat) அல்லது வீரசைவம் என்ற சீர்திருத்த சமய உட்பிரிவை ஏற்படுத்தினார்.

ஆறாம் விக்ரமாதித்தியரின் காலத்தில் வாழ்ந்த விக்னேஷ்வரா மிட்டாக்சரா என்ற நூலை எழுதினார். அதில் அவர், கல்யாண நகரத்தைப் போன்று வேறு ஒரு நகரம் இதற்கு முன்பும், பின்பும் இருக்கபோவதில்லை என்றும் விக்ரமாதித்தியா அரசர் போல் நாம் காணப்போவதுமில்லை கேட்கப்போவதுமில்லை என்று குறிப்பிடுகிறார்.

பசவண்ணர் மூன்றுவழிகளில் போதித்தார். அவைகள் 1. மென்மையான அறிவுரை, 2. கடுமையான விமர்சனம் மற்றும் 3. கண்டிப்பான எச்சரிக்கை ஆகும். சிவனிடம் முழு பக்தியுடன் சரணடையும் வழி ஒன்றுதான் பேரின்ப வீடுபேற்றை நல்கும் என்று அவர் போதித்தார். அவர் செய்யும் தொழிலே தெய்வம் என்றுரைத்தார். அவர் கி.பி. 1162 ல் அனுபவ மண்டபம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அவர் பொதுமக்கள் பேசும் மொழிபோல தன் வசனங்களை எளிய கன்னடத்தில் இயற்றினார்.



உலகச்சுடர் பசவண்ணர்

### கல்யாண சாளுக்கியர்களின் பங்களிப்புகள்

பாதாமி சாளுக்கியர்களைப் போல, கல்யாண சாளுக்கியர்களும் பல்வேறு துறைகளில் சிறந்த பங்களிப்பை ஆற்றியுள்ளனர். மன்னர் பதவி பரம்பரை உரிமையானது.

©KTBS Not to be republished

பேரரசு மண்டலங்களாகவும் நாடுகளாகவும் பிரிக்கப்பட்டன. கிராம நிர்வாகத்தில் உதவிபுரிய கம்பனாக்கள் (தற்போதைய ஹொப்லி Hobli) இருந்தனர்.

நிலவரி அரசின் முக்கிய வருமானமாகும். விற்பனைவரி, நுழைவு வரி மற்றும் தொழில் வரி ஆகியன பிறவருவாய்களாகும். நிலவருவாயை வசூலிக்க கடித்தவெர்கடே என்ற அதிகாரி நியமிக்கப்பட்டார் வாணிகத்திலும் தொழிற்சாலைகளிலும் பலபிரிவுகள் இருந்தன.


நாணயங்கள்

லக்குண்டி மற்றும் சூடி போன்ற இடங்களில் நாணயக் கூடங்கள் அமைக்கப்பட்டன. கடியானா, பணம், ட்ரும்பா (Drumma) பொன் மற்றும் சுவர்ணா போன்ற நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன.

சாளுக்கியர் ஆட்சிகாலத்தில் இலக்கியங்களுக்கு பேராதரவுகிடைத்தது. சமண கற்றறிவாளர்களின் ஆதரவுடன் கன்னட இலக்கியங்கள் செழிப்புற்றன. ரன்னா எழுதிய கதாயுத்தா (சாகச பீமவிஜயா) துர்கசிம்கா எழுதிய பஞ்சதந்திரம் பில்ஹனா எழுதிய விகரமங்காதேவ சரிதம் நாயன சேனா எழுதிய தர்மமுர்தா (Dharmamruta) மற்றும் விக்னேஷ்வரா இயற்றிய மிடக்சாரா என்ற சட்டநூல் போன்றவைகள் இவர்கள் காலத்தில் தோன்றிய புகழ்வாய்ந்த இலக்கியங்கள் ஆகும். மூன்றாம் சோமேஸ்வரர் எழுதிய மனசோலசா என்ற காவியம் சமஸ்கிருத மொழியின் களஞ்சியமாக கருதப்படுகிறது.

சாளுக்கியர்களின் தனித்தன்மை வாய்ந்த பங்களிப்பு யாதெனில் வசன இலக்கியங்கள் எழுந்ததாகும். அக்காமகாதேவி, அல்லம்பிரபு, மச்சாயா மற்றும் பலர் வசனகவிதைகளை இயற்றியோராவர்.

சாளுக்கியர்கள் இலக்கியத்தை மட்டுமல்ல கலையையும் ஆதரித்தனர். கலைத்துறையில் அவர்கள் ஆற்றிய பங்கு அளவிடற்கரியதாகும். லக்குண்டியிலுள்ள காசி விசுவேசுவரர் கோயில், இட்டகியிலுள்ள மகாதேவ கோயில் குருவட்டியிலுள்ள மல்லிகார்ஜுனா கோயில் மற்றும் கதக்கிலுள்ள திரிகுட்டேஸ்வரர் கோயில் போன்றவைகள் அவர்களுடைய கலையை பறைசாற்றும் சிறப்புக்குரிய கோயில்களாகும். இவ்வம்சத்தின் அரசர்கள் எண்ணற்ற கோயில்களை கட்டியெழுப்பி கன்னட நாட்டை கலையின் இருப்பிடமாக மாற்றினர்.


காசி விசுவேசுவரா கோயில் - லக்குண்டி

©KTBS Not to be republished

இசையும் நடனமும்கூட செழிப்புற்றது. இசைக்கலைஞர்களும் நடனமாடுபவர்களும் அரசபையில் விற்றிருந்தனர். சந்திரலேகா அரசியார் பல இசைமேதைகளையும் நடனம் புரிவோர்களையும் ஆதரித்தார். மனசோலசா மற்றும் இரண்டாம் ஐகதேகமல்லா எழுதிய சங்கீத சூடாமணி போன்ற நூல்கள், இசை, நடனம், கலை மற்றும் அணிகலன்கள் ஆகியவற்றைப்பற்றிய குறிப்புகளை தருகிறது.

### பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்கனை நிரப்புக :**

1. ராஷ்டிரகூடவம்சத்தை தோற்றுவித்தவர் _______ ஆவார்.
2. ராஷ்டிர கூடர்களின் தோல்விக்கு காரணமாக இருந்த கல்யாண் சாளுக்கிய மன்னர் _______ ஆவார்.
3. கவிராஜ மார்க்கம் (கவிரகசியா) என்ற நூலின் ஆசிரியர் _______ ஆவார்.
4. பொன்னா எழுதிய புகழ்வாய்ந்த கவிதை _______ ஆகும்.
5. கல்யாண் சாளுக்கியர்களில் மிகவும் புகழ்வாய்ந்த அரசர் _______ ஆகும்.
6. சமூக புரட்சியாளர் என்று கருதப்பட்டவர் _______ ஆவார்.

**II. குறுகியவிடையளி :**

1. ராஷ்டிரகூடர்களின் நிர்வாகம் எப்படி இருந்தது. விவரி.
2. ராஷ்டிர கூடர்களின் ஆட்சிகாலத்தில் கல்வி முறை எவ்வாறு இருந்தது ?
3. எல்லோரா கோயிலைப் பற்றி குறிப்பு எழுதுக.
4. கல்யாண சாளுக்கியர்கள் எவ்வாறு இலக்கியத்தை ஆதரித்தனர் ?

**III. செயல்முறை :**

1. ராஷ்டிர கூடர்களின் கோயில்களை பார்வையிட்ட ஆசிரியர்களிடமோ அல்லது மாணவர்களிடமோ உன் கருத்தை பகிர்ந்து கொள்.
2. மான்யகேத்தா அல்லது எல்லோராவிற்கு சுற்றுலா செல்க.

**IV. திட்டப்பணி :**

1. நான்கு குழுக்களாக எல்லோராவைப்பற்றி உரையாடுக.
2. மான்யகேதா தொடர்புடைய படங்களைச் சேகரி.
3. பசவண்ணரின் வாழ்க்கை வரலாறுகுறித்து திட்டம் ஒன்று தொகுக்க.

✽ ✽ ✽ ✽ ✽

©KTBS Not to be republished

பாடம் - 6

# சோழர்களும் துவாரசமுத்திராவின் ஒய்சாளர்களும் (கி.பி. 850 - 1279)

***இப்பாடத்தைப் கற்றபின் நீங்கள் அறிவன :***

- *சோழபேரரசின் விரிவு மற்றும் பலதுறைகளில் பங்களிப்பும்.*
- *ஒய்சாளரின் தோற்றம் சமயம், இலக்கியம், கலை மற்றும் கட்டிடக் கலைக்கு அளித்த கொடைகள்.*

*பல்லவர்களுகளுக்குப் பிறகு சோழர்கள் தமிழ்நாடு, ஆந்திரம் மற்றும் கருநாடகம் போன்ற மாநிலப் பகுதிகளில் தங்கள் கட்டுப்பாட்டை நிறுவி கி.பி. 9ம் நூற்றாண்டிலிருந்து 13ம் நூற்றாண்டுவரை ஆட்சி செலுத்தினர். அயல்நாடுகளில் இந்தியப்பண்பாட்டை பரவச்செய்த பெருமை சோழர்களையே சாரும். அவர்கள் மலைக்கவைக்கும் பேரழகுவாய்ந்த கோயில்களைக் கட்டினர். தஞ்சையிலுள்ள பிரகதீசுவரர் ஆலயம் அவர்களுடைய சிறப்புக்குரிய பங்களிப்பாகும். தமிழ் இலக்கியங்களை போற்றி ஆதரித்து வளர்த்ததால் பெரும்புகழ் அடைந்தனர்.*

## சோழர்கள் (கி.பி. 850 - கி.பி. 1279)

*சிலகாலங்கள் சோழர்கள் பல்லவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து பிறகு விடுதலையடைந்தனர். சங்க இலக்கிய கூற்றுப்படி, சோழமரபை தோற்றவித்தவர் கரிகால் சோழன் ஆவார். விஜயாலய சோழர் ஆட்சிப்பரப்பை விரிவாக்கி தஞ்சாவூரை தலைநகராக்கினார்.*



*தஞ்சைப்பெரிய கோயில் (பிரகதீசுவரர் ஆலயம் - தஞ்சாவூர்)*

©KTBS Not to be republished

சோழ மன்னர்களில் மிகவும் புகழ்வாய்ந்த முக்கியமானவர் முதலாம் ராஜராஜன் ஆவார். அவர் சிறந்த வீரமிக்க போராளி மட்டுமல்ல திறமையான நிர்வாகியுமாவார். சோழப்பேரரசின் நிறுவனரான அவர் சோழப்பேரரசின் அடித்தளத்தை வலிமைப்படுத்தி பேரரசின் எல்லையை விரிவுப்படுத்தினார். அவர் சேரர்கள், கங்கர்கள் மற்றும் பாண்டியர்கள் மீதும் வெற்றி கண்டார். வலிமையான கப்பற்படையை உருவாக்கி அவர் இலங்கையை கைப்பற்றினார். மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளில் தமிழர்களின் மேம்பட்ட ஆதிக்கத்தை காணமுடிகிறது. அத்தகைய நாடுகளின் அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டு துறைகளில் தமிழர்களின் தனிச்செல்வாக்கை காணமுடிகிறது. இன்றும் வெற்றிகரமாக தொடரக்கூடிய கடல்கடந்த வாணிபமுறையை சோழர்களே தொடங்கினர். முதலாம் இராஜராஜ சோழனால் தஞ்சையில் கட்டப்பட்ட பிரகதீசுவரர் ஆலயம் உலகப்புகழ் பெற்றதாகும்.

முன்றாம் இராஜேந்திர சோழர் காலத்தில் பேரரசு வலிமையற்றிருந்ததால் பாண்டியர்கள் எளிதாக வென்றனர்.

### சோழர்களின் பங்களிப்பு

சோழர்கள் திறமையான மற்றும் பயன்மிகு சிறப்பான நிர்வாக முறையை ஏற்படுத்தினர். அரசு மண்டலங்கள், கோட்டம் கோட்வாங்கி (Kotwange) நாடு, கூற்றம் குரம் (Kurram) அல்லது கிராம சமூகம் மற்றும் தாரகுரம் (tara - Kurram) போன்ற பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் ஊர் (ur) என்ற குழு இருந்தது.

சோழர்களின் தனித்தன்மை வாய்ந்த தரமான நிர்வாகத்தின் சிறப்பு என்னவென்றால் கிராமங்களின் உள்ளாட்சி முறையாகும். (Self-governance) (or) கிராமங்களின் தன்னாட்சி முறையாகும். கிராம சபைதான் முதல் சபாவாக விளங்கியது. தாரகுரம் (Tarakurram) என்பது ஒரு கிராமம் ஆகும். ஒவ்வொரு (Kurram) குரமும் மாகசபை என்ற குழுவைப் பெற்றிருந்தது. அதன் உறுப்பினர்கள் பெருமக்கள் என அழைக்கப்பட்டனர். உறுப்பினர்கள் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டனர். வடமொழி (சமஸ்கிருதம்) பண்டிதர்கள் மற்றும் செல்வந்தர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்பட்டனர்.

ஆறில் ஒரு பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்து. நீர்ப்பாசன முறைக்கு சிறப்பான கவனம் செலுத்தப்பட்டது. சோழர்கள் பல ஏரிகளை அமைத்தனர். அவைகளுள் ஒன்று பெங்களூருக்கு அருகிலுள்ள பெலந்தூர் ஏரியாகும். அவர்கள் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு பெரிய குளத்தையமைத்தனர்.

சோழர்கள் சிவனடியார்களாவர். எனவே பல சிவாலாயங்களை கட்டியெழுப்பினர். தஞ்சாவூரில் உள்ள பீரகதீசுவரர் ஆலயம் 500 அடி உயரத்தையும் 250 அடி அகலமான முற்றத்தையும் உடையது. அதனுடைய கோபுரம் 200 அடி உயரமாகும். இராஜேந்திர சோழன் கங்கை கொண்டபுரத்தில் சோழ ஈசுவரர் கோயிலை கட்டினார். சென்னப் பட்டனா அருகில் உள்ள அப்ரமேய கோயில், பெங்களூருக்கிருகிலுள்ள பேகூரில் உள்ள சோழஈசுவரர் கோயில் மற்றும் பின்னமங்களாவிற்கு அருகிலுள்ள முக்தேஷ்வரா போன்ற கோயில்கள் கருநாடகத்தில் சோழர்களால் கட்டப்பட்டவைகளாகும். ஆலயங்கள் பொருளாதார மற்றும் பண்பாட்டு மையங்களாக விளங்கின. இக்காலத்தில்


©KTBS Not to be republished

உருவாக்கப்பட்ட சிவன், கணபதி விஷ்ணு, துர்கா மற்றும் கார்த்திகேயன் சிலைகள் புகழ்வாய்ந்தவையாகும்.


கல்வியைப் பரப்ப சோழர்கள் பல அக்ரஹாரங்களை ஏற்படுத்தினர். உத்திரமேரூர் அக்ரஹாரம் அவைகளுள் மிகவும், புகழ்வாய்ந்ததாகும். ஆலயங்கள் கல்வியின் மையங்களாக விளங்கின. அவைகள் சமய விழாக்கள் நடத்தப்படும் மையங்களாகவும் இருந்தன சோழர் ஆட்சிகாலத்தில் தான் தமிழ் இலக்கியங்கள் அனைத்துத்துறைகளிலும் முன்னேற்றம் கண்டன. கம்பர் இயற்றிய இராமயணம், சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரிய புராணம் மற்றும் திருத்தக்கதேவர் எழுதிய சீவக சிந்தாமணி போன்றன குறிப்பிடத்தகுந்த இலக்கியங்கள் ஆகும்.

## துவார சமுத்திராவின் ஒய்சாளர்கள் (கி.பி. 984 -1346)

சாளுக்கியர்கள் வலிமையற்ற போது கருநாடகத்தில் ஒய்சாளர்கள் ஆற்றல்மிக்கவர்களாக விளங்கினர். சிக்கமகளூர் மாவட்டம் மடிக்கேரி தாலுகாவிலுள்ள செசேவூர் (தற்போதைய அங்கடி) கிராமத்தின் சலா தான் ஒய்சாள வம்சத்தை தோற்றுவித்தவராவார். சமண முனிவரின் ஆணைப்படி சீறிவந்த புலியுடன் போராடி தாக்கி கொன்றதால் அங்குள்ளோர் அனைவரும் ஆச்சரிய ஆரவாரத்துடன் ஒய்சளா என முழங்கினர். இவ்வாறு இவ்வம்சம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வம்ச மன்னர்கள் இலக்கியம், கல்வி, கலை, கட்டிடக்கலை மற்றும் நீர்ப்பாசன முறைக்கு அளப்பரிய பங்காற்றியுள்ளனர்.



ஒய்சாளர்களின்ராஜ முத்திரை (அரசசின்னம்)



ராமானுஜர்

நிருபகாமா (Nrupakama), ஈரேயங்கா (Ereyanga) மற்றும் பல்லாளர் ஆகியோருக்கு பின் வந்த விஷ்ணுவர்த்தனர், ஒய்சளாமன்னர்கள் மிகவும் முக்கியமானவர் ஆவார். இவ்வம்சத்தின் ஆற்றல் வாய்ந்த அரசரான இவர், சோழர்களிடமிருந்து கங்கவாடியை கைப்பற்றினார். இதனால் அவர் தளக்காடு (தலக்காடு) கொண்டான் என்ற பட்டத்தைப் பெற்றார். இவ்வெற்றியின் நினைவாக அவர் தலக்காடு என்ற இடத்தில் கீர்த்தி நாராயண கோயிலையும் பேளூரில் சென்னகேசவா (விஜயநாராயணா) கோயிலையும் கட்டினர். அவர் ஆட்சிப்பரப்பை மேலும் விரிவாக்க முயற்சித்தாலும் சாளுக்கியமன்னர் ஆறாம் விக்ரமாதித்தியரால் தோற்கடிக்கப்பட்டார்.

சோழப்பேரரசில் ராமானுஜர் தன்னுடைய விஷிஸ்டா அத்வைத கருத்துக்களை பரப்ப முடியாததால் அவர்

பிட்டிதேவரின் (விஷ்னுவர்த்தணர்) அரசவைக்கு வருகைப்புரிந்தார். அவரின் ஆதரவோடு கருநாடகம் முழுவதும் தன் உள்சமயக்கருத்துக்களை இராமனுஜர் பரப்பினார்.

மூன்றாம் பல்லாளர் காலத்தில் இவ்வரசு வீழ்ச்சியடைந்தது. அதே காலக்கட்டத்தில் தான் விஜயநகரப் பேரரசு ஆட்சிக்கு வந்தது.

**ஓய்சாளர்களின் பங்களிப்பு**


ஒய்சாளர்கள் மாகாண நிர்வாகமுறையை நடைமுறைப் படுத்தினர். ஆட்சியின் அதிகாரம் அரசர், அரசியார் மற்றும் அரச குடும்பத் தினருக்கு வழங்கப்பட்டது. நாடு மற்றும் விஷயாபோன்ற பகுதிகளின் நிர்வாகத்தை அதிகாரிகள் கவனித்து கொண்டனர். கவுடா, சேனாபவா, தலவாரா (Talavara) மற்றும் இன்னபிற அரச பிரதிநிதிகள் கிராமங்களில் இருந்தனர்.

விவசாயத்தை மேம்படுத்த ஒய்சளர்கள் சாந்திசாகர், பல்லாளராயா சமுத்திரா, விஷ்ணுசமுத்திரா போன்ற எண்ணற்ற ஏரிகளை அமைத்தனர். நகர்புறங்களில் பலத்தரப்பட்ட தொழில்களை செய்யும் பலவகுப்பினர் இருந்தனர். நிலவரியே அரக்கு முக்கிய வருவாயாக அமைந்தது. ஒய்சாளர் மன்னர்களின் தனிச்சிறப்புயாதெனில் அவர்கள் கருடா என்ற சிறப்பு மெய் காவல் படையை பயன்படுத்தினர். அரசர் இறந்தபோது இப்படைவீரர்களும் தங்கள் உயிர்களை தியாகம் செய்வர்.

ஒய்சாளர் ஆட்சிகாலத்தில் சமணம், புத்தம், சைவம், வைணவம், வீரசைவம் மற்றும் ஸ்ரீ வைணவம் போன்ற பல சமயப்பிரிவுகள் இருந்தன. பின்வரும் பேளூர் கோவிலுள்ள பாடல் மதநல்லிணக்கத்தை வலியுறுத்துகிறது.

அக்ரஹாரங்கள் மடங்கள் மற்றும் கோயில்கள் கல்வி மையங்களாக விளங்கின. மேலுக்கோட்டை, சலகாமே, அரசிகரே இன்னும் பிற இடங்களில் சிறப்பான கல்விமையங்கள் இருந்தன. இங்கு வேதங்கள், வேத சாஸ்திரம், கன்னடம் மற்றும் சமஸ்கிருதம் போன்ற துறைகள் கற்பிக்கப்பட்டன.

**பேளூர் கோயிலில் இன ஒற்றுமை மேம்படுத்தும் கவிதை**



ಯಂ ಶೈವಾಸ್ಸಮುಪಾಸತೇ ಶಿವ ಇತಿ ಬ್ರಹ್ಮೇತಿ ವೇದಾಂತಿನೋ
ಬೌದ್ಧಾ ಬುದ್ಧ ಇತಿ ಪ್ರಮಾಣಪಟವಃ ಕರ್ತೇತಿ ನೈಯಾಯಿಕಾಃ
ಅರ್ಹಶ್ಚೇತಿ ಹ ಜೈನಶಾಸನರತಾಃ ಕರ್ಮೇತಿ ಮೀಮಾಂಸಕಾಃ
ಸೋಽಯಂ ವೋ ವಿದಧಾತು ವಾಂಛಿತಫಲಂ ಶ್ರೀ ಕೇಶವೇಶಸ್ಸದಾ ||

ಶೈವರು ಶಿವನೆಂದು, ವೇದಾಂತಿಗಳು ಬ್ರಹ್ಮವೆಂದು, ಬೌದ್ಧರು ಬುದ್ಧನೆಂದು, ಪ್ರಮಾಣದಲ್ಲಿ ಸಮರ್ಥರಾದ ನೈಯಾಯಿಕರು ಕರ್ತೃವೆಂದು, ಜೈನರು ಅರ್ಹನೆಂದು, ಮೀಮಾಂಸಕರು ಕರ್ಮವೆಂದು ಯಾವನನ್ನು ಉಪಾಸನೆ ಮಾಡುವರೋ ಅವನೇ ಆದ—ಈ ಶ್ರೀ ಕೇಶವನೆಂಬ ಈಶನು ನಿಮಗೆ ಇಷ್ಟಾರ್ಥವನ್ನು ಪಾಲಿಸಲಿ.


கன்னட இலக்கியங்கள் அளவிடற்கரிய முறையில் செழித்தோங்கியது. ருத்ரபட்டா, ஜகன்னாத விஜயம் என்ற நூலையும் பெரும்புலவர் ஜன்ன யசோதர சரிதையையும் ஹரிஹரா சம்புகவிதையான ''கிரிஜா கல்யாண'' என்ற காவியத்தையும், ராகவங்கா ''அரிச்சந்திர காவியத்தையும்'' மற்றும் கேசிராஜா ''சப்தமணி தர்பனா'' என்ற நூலையும் எழுதினர். சமஸ்கிருத மொழியிலும் சிறப்பான காவியங்கள்



©KTBS Not to be republished

படைக்கப்பட்டன. அவைகள் இராமானுஜரின் ''ஸ்ரீபாசியமும்'' பரசாரபட்டாவின் ''ஸ்ரீ குண ரத்தின கோசாவும்'' ஆகும்.

கட்டிடக் கலையில் ஒய்சாளர்கள் உலகப்புகழ் பெற்று விளங்குகின்றனர். ஒய்சாளர்கள் எண்ணற்ற கோயில்களை பளப்பக்கல் (சவர்காரக்கல்)லில் கட்டினர். அனைத்துக் கோயில்களிலும் பின்வரும் ஐந்து சிறப்பியல்புகளை காணலாம். அவைகள், (1) நட்சத்திர வடிவுடைய கருவரை (2) துணை பீடம் (ஜகட்டி) (3) அலங்கரிக்கபட்ட அரங்கம் (4) கவிகை மாடம் (5) தூண்கள் ஆகும்.



சென்னகேசவர் ஆலயம் - பேளூர்



சிலைப் பெண்

சென்னகேசவா கோயிலின் தூண்களின் அடிப்பாகத்தில் அழகான நடனமங்கையரின் சிலைகள் உள்ளன. ஹளேபீடு என்ற இடத்தில் ஒய்சளாசுவரர் கோயிலை கேட்டமல்லா (Ketamalla) என்ற படைத்தளபதி கட்டினார். சோமநாதபுரத்தில் சோமதத்த நாயக்கா (Somadadanayaka) கட்டிய கேசவா கோயில் புகழ்வாய்ந்த தாகும். பல கோயில்களும் பசதிகளும் அரசிக்கரே, கோவிந்தனஹள்ளி, தொட்டகட்டவள்ள மற்றும் பத்ராவதி போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இவைகள் எல்லாம் ஒய்சாளர்களின் மிக நுட்பமான அழகுவாய்ந்த சிற்பக்கலைக்கு சான்றாக விளங்குகின்றன. ஒய்சாளர்களின் கட்டிடக்கலை பிற எல்லா கட்டிடக்கலையிலும் செல்வாக்குப்பெற்றுள்ளன. தசோஜா, சவானா, ஜகனா மற்றும் டங்கனா போன்றோர் இக்காலக்கட்டத்தின் புகழ்வாய்ந்த சிற்பிகளாவர்.

### பயிற்சிகள் :

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. சோழர்களின் தலைநகர் _______ ஆகும்.
2. சோழர்கால கிராம சபை _______ ஆகும்.
3. சோழர்களின் புகழ்வாய்ந்த கல்விமையம் அல்லது அக்ரஹாரம் _______ ஆகும்.

© KTBS Not to be republished

4. பெங்களூருக்கு அருகிலுள்ள பேகூரில் சோழர்கள் கட்டிய கோயில் ______ ஆகும்.

5. ஒய்சாளர்கள் காலத்தில் விளங்கிய மெய்க்காலவர் படை ______ ஆகும்.

6. ராகவங்கா இயற்றிய கவிதைப்பாடல் ______ ஆகும்.

## II. *குறுகியவிடையளி :*

1. சோழப்பேரரசை நிறுவியவர் யார் ?
2. சோழர்களின் நிர்வாக சிறப்பு பற்றி குறிப்புவரைக.
3. ஒய்சாளர்கள் இலக்கியத்திற்கு ஆற்றிய பணி என்ன?

## III. *செயல்முறை :*

1. உனக்கு அருகிலுள்ள கோயிலை சென்று பார்வையிட்டதுபற்றி கலந்துரையாடு.
2. உன் ஆசிரியரிடமிருந்து பேலூர் சிலை பாலிக்கா பற்றி மேலும் அறிந்துகொள்க.

## IV. *செயல்திட்டம் :*

1. பேலூர் மற்றும் ஹளேபீடு போன்ற இடங்களை பார்வையிட்டு அதுபற்றிய தகவல் கட்டுரைவரைக.
2. ஒய்சாளர்களின் கலைபற்றி படித்துணர்ந்து அதுபற்றி ஒரு திட்டம் தீட்டுக.

✻ ✻ ✻ ✻ ✻

©KTBS
Not to be republished

அரசியல் ஆட்சியியல் (Political Science)

## அத்தியாயம் - 1

# மனித உரிமைகள்

**இந்த பாடத்தை கற்றபின் நீங்கள் அறிவன.**

1. *மனித உரிமைகள் மற்றும் வளர்ச்சி.*
2. *மனித உரிமைகளை அறிவித்தல்.*
3. *மனித உரிமைகள் மற்றும் இந்தியச் சட்டம்.*
4. *மனித உரிமைகளை நடைமுறைப்படுத்தும் வழிகள்.*

மனித உரிமையின் கொள்கைகள் மனித நாகரத்துடன் தோன்றியுள்ளது. இது மனிதன் வளர்ச்சி, அமைதி மற்றும் கூடிவாழும் தன்மைக்கு தேவைப்படுகிறது. உரிமைகள் ஜனநாயகத்தின் தூணாக விளங்குகிறது. அரசியல் சிந்தனையாளர் பேராசிரியர் லாஸ்கின் அவர்கள். ஒரு தேசத்தை அங்குள்ள மனித உரிமைகள் மூலம் குறிப்பிடவேண்டும் என்கிறார்.

மனித உரிமைகளிலிருந்து ஒவ்வொருவரும் நேர்மையான நல்ல சமுதாயம் உருவாக உதவி புரியும். அதனால், உலக அமைப்பு மனித உரிமைகளை அறிவித்து, அவைகளை பாதுகாப்பது, ஒவ்வொரு நாட்டின் ஆட்சி முறையின் பொறுப்பு.

**மனித உரிமைகள் மற்றும் வளர்ச்சி :**

ஒவ்வொரு மனிதனும் கௌவரத்துடனும், மதிப்புடன் வாழ மனித உரிமைகள் முக்கியமாகும். மனிதனின் எல்லா வளர்ச்சிக்கும் தேவையான அம்சங்களே மனித உரிமைகளாக இருக்கும்.

மனித உரிமையின் ஆரம்பம் பழமையான கிரேக்கம் மற்றும் ரோம் நாட்டின் அதென்ஸ் மற்றும் ஸ்பார்டா நகரங்களில் குறிப்பிடப்படுகிறது. சாக்ரடிஸ், பிளாட்டோ மற்றும் அரிஸ்டாடிலின் சிந்தனைகளில் நாடுகள் மற்றும் மக்களிடத்தேயுள்ள உறவு பற்றி விவரிக்கும்போது, ஒரு நபரின் உரிமையைப் பற்றி விவாதித்திருப்பதை கூறியுள்ளது.

மேக்னா கார்ட்டா (மகாசாசனம்) கி.பி.1215 மேக்னா கார்ட்டா அல்லது ,காசாசனம், ஆங்கில அரசியல் அமைப்பின் உருவாக்கத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி உள்ள சாச னமாகும். கி.பி. 1215-ல் இங்கிலாந்தின் அரசன் ஜான், அனேக பழங்கால நியமங்கள் மற்றும் சம்பிரதாயங்களை மீறினான். இதனால் மக்கள் தங்களுடைய உரிமைகளைக் கொடுக்கும்படி போராடினார்கள். இதன் காரணமாக அரசன் மகாசாசனத்திற்கு கையெழுத்திட்டான். இதனால் அரசன் அரசின் தளைகளிலிருந்து விடுதலையடைந்தது. எல்லா மக்களும் சொந்த மற்றும் முன்னோர்களின் சொத்துரிமையை பெற்றனர். சட்டத் தின் முன்பு சமத்துவத்தை முன்வைக்கப்பட்டது. மகாசாசனம் நவீன ஜனநாயகத்தின் வளர்ச்சியில் ஒரு மகத்துவமான அரசியல் சட்டமாக அமைந்துள்ளது.



©KTBS Not to be republished

ஒரு நபரின் இயற்கை உரிமையை குறித்து ஜான்லாக் முதன்முதலில் முறையான சிந்தனையை செய்தார். அவரின்படி ஒரு நபருக்கு உரிமைகள் யாரிடமிருந்தும் வழங்கப்பட்டதல்ல? ஒவ்வொரு மனிதனும் பிறந்தது முதல் உயிர்வாழும். மற்றும் சு தந்திரத்தை பெற்றிருப்பான். இதனால் நபரின் உரிமைக்கு மதிப்புக் கூடியது. இதனுடன் 1688-ல் இங்கிலாந்தில் நடைபெற்ற ''இரத்தம் சிந்தாதபுரட்சி''யினால் 1689-ல் மனித உரிமை மசோதா நடைமுறை படுத்தப்பட்டது. இதில் முதல்முறையாக சடட்ஈட வடிவில் மனித உரிமைக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது.

ஜான்லாக், ரூசோ மற்றும் மான்டெஸ்கோ போன்ற சிந்தனையாளர்களின், சிந்தனையினால் அமெரிக்கா மற்றும் பிரான்சில் புரட்சிகள் ஏற்பட்டன. இந்த புரட்சியின் பலனாக அமெரிக்காவிற்கு சுதந்திரம் கிடைத்தது. அமெரிக்கா அரசியல் அமைப்பின் முதல் திருத்தத்துடன் 1791, டிசம்பர் 15 அன்று மனித உரிமைகள் பட்டியலை அமெரிக்க அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டது. 1789-ல் பிரான்சு மனித உரிமைகள் அறிவிப்பு, மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக உள்ளது. இதனால் பிரான்சில் ச ர்வாதிகார ஆட்சி ஒழிந்தது. மற்றும் முதல் குடியரசு உருவானது. இந்த அறிவிப்பு எல்லா மக்களுக்கும் சுதந்திரம், சமத்துவம், சொத்து, பாதுகாப்பு போன்றவற்றை கொடுத்தது.


மனித உரிமைகளின் வளர்ச்சி ஏதோ ஒரு பகுதிக்கு மட்டும் அல்லாமல் உலக அளவில் பரந்து விரிந்தது. முதலாம் உலகப் போருக்குப் பின் உருவாக்கப்பட்ட உலக நாடுகளின் சங்கம், மனித உரிமைகளின் பாதுகாப்பிற்கு உதவியாக ஒருகைப்பிடியை பெற்றிருந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மனித உரிமைகளின் பாதுகாப்பதற்கு ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சர்ச்சில் போன்றவர்களின் முயற்சியினால் உலக அமைப்பு உருவானது.

உலக அமைப்பின் பூர்வாங்கமாக உலக மக்களாகிய நாம் ஒரு முடிவவெடுப்போம். நம்முடைய எதிர்கால சந்ததியருக்காக இந்த உலகத்தை நாசப்படுத்தும் தேவையற்ற போரை தடுப்போம். அதனால் உலக அமைப்பின் முக்கிய நோக்கம் உலகத்தின் எந்த பகுதியினும் மனித உரிமை மீறல்களை தடுப்பதாகும். இந்த செயலுக்காக உலக அமைப்பை 1948 டிசம்பர் 10-ல் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு நாடும் மனித உரிமையை கட்டாயமாக பாதுகாப்பதை தெரிவிக்கிறது.

**மனித உரிமைகள் மற்றும் இந்தியச் சட்டம்**

உலக அமைப்பு அறிவித்துள்ள மனித உரிமைகளின் அம்சங்களை நமது சட்டத்தின் பூர்வாங்கத்தில் மற்றும் அடிப்படை உரிமையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நமது பூர்வாங்க சட்டத்தில் நியாயம், சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் 3-ம் பாகத்தின் அடிப்படை உரிமைகளில் விதி 12 - 35ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அடிப்படை சட்டத்தில் 7 அடிப்படை உரிமைகள் கொடுக்கப்பட்டன. 1975-ல் சட்டத்தின் 44-ன் திருத்தத்தின் சட்டத்தின் அடிப்படையில் சொத்துரிமை அடிப்படை உரிமையில் இருந்து எடுத்து விதி 300அல் சட்ட உரிமையாக்கப்பட்டது. தற்போது 6 அடிப்படை உரிமைகள் உள்ளன.

©KTBS Not to be republished




இதன் விரிவாக்கம் சென்ற வகுப்பில் படித்தீர்கள்

**இதனை அறிக**

அரசியல் அமைப்பு 86-ல் திருத்தம் செய்து 21ன் விதிப்படி 2002-ல் கல்வியை ஒரு உரிமையாக்கப்பட்டுள்ளது. இதன்படி 6 வயது முதல் 14 வயது உள்ள எல்லா குழந்தைகளுக்கும் அரசு இலவச கட்டாயக் கல்வி வழங்க வேண்டும்.

**மனித உரிமைக்கும் மற்றும் அடிப்படை உரிமைக்கும் உள்ள வேறுபாடு :**

மனித உரிமைகள் ஒரு நபரின் முழு வளர்ச்சிக்கு தேவைப்படுகிறது. இவை கள் மனிதனின் மதிப்பு, மரியாதையை அதிகரிக்கும். இவைகளை மீறினால் நீதி மன்றங்களின் குறிப்பிட்ட பாதுகாப்பு இருக்காது. அடிப்படை உரிமைகள் மனிதனின் முழு வளர்ச்சிக்கு தேவைப்பட்டு சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது. இவையை மீறினால் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் ஆணையின் மூலம் பாதுகாக்கிறது. இவை குறிப்பிடத்தக்கவை இதை சட்டம் வழங்கும்.

**மனித உரிமைகளின் பாதுகாப்பு அமைப்புகள் :**

மனித உரிமைகளின் பாதுகாப்பிற்கு சம்பந்தப்பட்ட 1966-ல் உலக அமைப்பு உவப்பு நாடுகளுடன் சபையை நடத்தி ஒவ்வொரு நாடும் மனித உரிமை பாதுகாப்பிற்கு

©KTBS
Not to be republished

உறுதியாக இருக்க வேண்டும் என குறிப்பிட்டது. மனித உரிமைகள் முழுபாதுகாப்பிற்கு, உலக அளவில், உலக மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு உதவும் வகையில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.

**தேசிய மனித உரிமைகள் ஆணையம் :**

தேசிய மனித உரிமைகள் ஆணையம் சட்டரீதியான அமைப்பாக உள்ளது. 1993-ல் நிறுவப்பட்டது. இது ஒரு தலைவர். ஊச்சநீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதியாக இருக்க வேண்டும். உறுப்பினர்கள் உச்சநீதி மன்றத்தின் பணியில் அல்லது ஓய்வு பெற்ற நீ திபதியாக இருக்க வேண்டும். இரண்டு உறுப்பினர்கள் மனித உரிமைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும். இந்த ஆணையம் நான்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. தலைவர் மற்றும் உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிப்பார். இவர்களது அதிகார காலம் 5 வருடம் அல்லது 70 வயது வரைக்கும் பதவியில் இருப்பார்கள். இதில் எது முதலில் வருகிறதோ, அதில் முதலில் வருவதைப் பரிசீலிக்கப்படும். இவர்கள் மத்திய அரசு வழங்கும் ஊதியம், பெறுவார்கள். இந்த ஆணையம் நடுநிலையாக, சு தந்திரமாக, சுயமாக செயல்பட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**மாநில மனித உரிமை ஆணையம் :**

மனித உரிமைச் சட்டம் 1993-ன் படி மாநிலங்களில் மாநில மனித உரிமை ஆணையத்தை நிறுவப்பட்டுள்ளது. இது மனித உரிமை மீறல்களை விசாரிக்கும், இந்த ஆணையம் ஒரு தலைவர், இரண்டு உறுப்பினர்களைக் கொண்டது. தலைவர் உச்ச நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாக இருக்க வேண்டும். உறுப்பினர்கள் உச்சநீதிமன்றத்தில் பணியில் இருக்க வேண்டும். அல்லது ஓய்வு பெற்ற நீதிபதியாக இருக்க வேண்டும். அல்லது மாறுபட்ட நீதிமன்றத்தில் குறைந்தது 7 வருடங்கள் பணிபுரிந்திருக்க வேண்டும். இவரை ஆளுநர் நியமிப்பார்.

**தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் :**

2003-ல் இந்திய அரசியல் அமைப்பின் விதி 338-க்கு 89-வது திருத்தம் செய்வதன் மூலம், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பட்டியலை இரண்டாகப் பிரித்தனர். தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம், ஒரு தலைவர், ஒரு துணைத் தலைவர் மற்றும் 3 உறுப்பினர்கள் இருப்பார்கள். இவர்களை ஜனாதிபதி அவர்கள் நியமிப்பார். தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தும் வன்முறைகளை தடுக்க முன்னெச்சரிக்கையாக இருத்தல், நபர்களின் மீது மனித உரிமை மீறல்களை குறிப்பிட்டு அவர்களுக்கு தேவையான பாதுகாப்பைக் கொடுப்பது இந்த ஆணையம் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்காக மத்திய, மாநில அரசுகள் உருவாக்கும் திட்டங்களுக்கு தேவைப்படும் தகவலை தருவது.

**தேசிய பழங்குடியினர் ஆணையம் :**

2003 இந்திய அரசியல் அமைப்பின் விதி 336-க்கு 89-வது திருத்தம் செய்வதன் மூலம், பழங்குடியினர் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. ஒரு தலைவர், ஒரு துணைத்தலைவர்



©KTBS Not to be republished

மற்றும் 3 உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களை ஜனாதிபதி நியமிப்பார். இந்த ஆணையம் தாழ்த்தப்பட்டோர் ஆணையம் போன்று செயல்படும்.

**தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் :**

1993-ல் இந்த ஆணையம் நியமிக்கப்பட்டது. இது ஒரு தலைவர், 4 உறுப்பினர்களைக் கொண்டது. இந்த ஆணையம் பிற்படுத்தப்பட்டோரின் உரிமைகள் பாதுகாக்கும் பொறுப்பைப் பெற்றுள்ளது.

**தேசிய மகளிர் ஆணையம் :**

மகளியரின் உரிமையை பாதுகாக்கும் நோக்கில் 199-ல் தேசிய மகளிர் ஆணையம் உருவாக்கப்பட்டது. இது ஒரு தலைவர், ஐந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. சட்டப்படி மகளியர்க்கு கொடுக்கப்பட்டுள்ள சட்ட பாதுகாப்பைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவது மகளியரின் சமூக அந்தஸ்து, பொருளாதாரம், கல்வி மற்றும் ஆரோக்கியம் போன்றவற்றைப் பரிசீலிக்கும் செயல்களை மேற்கொள்ளும்.

**தேசிய சிறுபான்மையினர் ஆணையம் :**

சிறுபான்மையினர் உரிமையைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் 1992-ல் தேசிய சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் உருவாக்கப்பட்டது. இது ஒரு தலைவர், ஒரு துணைத் தலைவர் 5 உறுப்பினர்கள் இருப்பார்கள். இது, ஆறு சமயச் சமுதாயங்களை, இஸ்லாமியர், கிறிஸ்துவர், சீக்கியர், பௌத்தர்கள், பாரசிகரர், சமணங்கள் இவர்களை சிறுபான்மையினர் என்று அழைக்கப்படு கிறார்கள். இந்த சமுதாயத்தின் முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பிற்குத் தேவைப்படும் நடவடிக்கைகளை எடுப்பது போன்ற செயல்களில் எடுபடும்.

**இதனை அறிக :**

கொடுமை, சுரண்டல்களைத் தடுக்க அரசு பல சட்டங்களை அமுல்படுத்தி இருக்கிறது.

1. குறைந்த பட்ச கூலி - 1948
2. வரதட்சனை தடுப்புச்சட்டம் - 1956
3. உடன்கட்டை ஏறல் - 1987
4. தகவல் உரிமைச் சட்டம் - 2005
5. சட்ட விரோதத் தொழில் தடுப்புச் சட்டம் 1956
6. அடிமைத் தொழிலாளர் சட்டம் - 1976
7. மனித உரிமை பாதுகாப்புச் சட்டம் - 1993
8. குடும்ப வன்கொடுமை தடுப்புச் சட்டம் - 2005

**தகவல் உரிமைச் சட்டம் :**

இந்திய நாட்டில் தகவல் உரிமைச் சட்டம் 2005-ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த சட்டத்தின் முக்கிய நோக்கம் என்றால் பொது வாழ்க்கையிலல் ஊழல் ஒழிப்பு,

©KTBS Not to be republished

செயல்பாட்டில் நடுநிலைமை மற்றும் அரசாங்கத்தை மக்களுக்கு பொறுப்பு இருக்க வைப்பது. ஒரு விண்ணப்பம் செலுத்துவதன் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து தகவலுக்காக விண்ணப்பித்த 30 நாட்களில் தகவலைப் பெறலாம். வாழ்க்கை மற்றும் சுதந்திரத்திற்கு சம்பந்தப்பட்ட தகவலை 48 மணி நேரத்திற்குள் தரவேண்டும். ஆனால் நபர் வேண்டிய தகவல், தேசியத்தின் பாதுகாப்பு, ஒற்றுமைக்கு சம்பந்தப்பட்டு இருந்தால் அரசாங்கம் நிராகரிக்கலாம்.

## பயிற்சி

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. மனித உரிமை ............. ஆண்டு அறிவித்தது.
2. மேக்னா கார்ட்டா சாசனத்திற்கு ............... அரசன் கையெழுத்திட்டான்.
3. உச்சநீதிமன்றம் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கிறது என்பதை விவாதி.
4. தேசிய மனித உரிமை ஆணையம், மனித உரிமையின் பாதுகாவலன் நிரூபி.
5. மாநில மனித உரிமைகள் குறித்து விவாதி.

**II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு குழுவுடன் விவாதித்து விடையளி:**

1. மனித உரிமைகளின் வளர்ச்சியை விளக்குக.
2. மனித உரிமைகள் மனிதனின் எல்லா வளர்ச்சிக்கும், அவசியமாக உள்ளது என்பதை நிரூபி.
3. உச்சநீதிமன்றம் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கிறது என்பதை விவாதி.
4. தேசிய மனித உரிமை ஆணையம், மனித உரிமையின் பாதுகாவலன் நிரூபி.
5. மாநில மனித உரிமைகள் குறித்து விவாதி.

**III. செயல்பாடு :**

1. மனித உரிமைகள் காப்பது பற்றி பேச்சுப் போட்டி நடத்துக.
2. மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைக்கும் உள்ள வேறுபாடு யாது?

✻✻✻✻✻

©KTBS
Not to be republished

*பாடம் - 2*

# *உள்ளாட்சிகள்*

***இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன :***

- *உள்ளாட்சியின் முக்கியத்துவத்தைப் பற்றி அறிதல்.*
- *உள்ளாட்சி அமைப்பின் நோக்கங்கள் மற்றும் நடைமுறைகளை விவரித்தல்.*
- *உள்ளாட்சியின் அமைப்பு, நிரவாகம், பொருப்புக்கள் மற்றும் கடமைகளை விவரித்தல்.*

*இந்தியாவில் உள்ளாட்சிகள் பற்றிய கற்பனைகள்மிகவும் பழமையானது. பல பேரரசர்கள் உள்ளாட்சிகளை அமைத்து மற்றும் அவைகளின் விரிவாக்கத்திற்கு முன்னுரிமை அளித்துள்ளனர். என்பதை வரலாற்றின் மூலம் தெரியவருகிறது. உள்ளாட்சி அமைப்புகள் சமுதாயம் மற்றும் அரசுகளின் இடையில் தொடர்பு உண்டாக்குவதுடன் மக்கள் தங்களுடைய பிரச்சனைகளை முழுவதுமாக வெளிப்படுத்த அவகாசம் அளிக்கிறது. உள்ளாட்சி அமைப்புகள் அங்குள்ள பிரச்சினைகளை அங்குள்ள மக்களின் உதவியுடன் நிவர்த்தி செய்து கொள்ள உதவுகின்றன. மேலும் ஆட்சியில் உள்ளூர் மக்கள் பங்கேற்கவும், மக்களாட்சி நிறுவனங்களை கீழ்மட்டதிலிருந்து பாதுகாப்புப் பெறும் மக்கள் உள்ளாட்சி மன்றங்களுக்கு தம்முடைய பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அதிகாரம் அளிக்கும் உரிமையைப் பெற்றிருக்கும். இவ்வாறு சுயாட்சி அளிக்கும் மன்றங்களை (மண்டலங்களை) உள்ளாட்சி அரசுகளின் மூலம் அமைக்கப்பட்டு அவைகளின் அதிகாரம் பரவல் ஆளுகையாய் இருக்கும். இந்தியாவில் **1919** மற்றும் **1935**ல் ஆங்கில அரசங்கம் நடைமுறைப் படுத்திய சட்டங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகளவு அதிகாரத்தை அளித்தது. காந்தியடிகள் கண்ட ராம ராஜ்ஜியத்தின் கனவு நனவாக வேண்டும் என்றால் கிராம ராஜ்ஜியம் அல்லது கிராம சுயராஜ்யம் அமைப்பதின் மூலம் அமைய வேண்டியதாகிறது. தேசப்பிதாவின் இக்கனவை நனவாக்க இந்தியா விடுதலைக்குப் பிறகு பல்வேறு குழுக்கள் மற்றும் கமிஷன்களை அமைத்து சில சட்டங்களை நடைமுறைப் படுத்தியுள்ளது.*

*இந்திய அரசியல் அமைப்பில் கிராம பஞ்சாயத்துகளின் அமைப்புகளை ஏற்படுத்துமாறு மாநிலங்களுக்கு சரியான செயல் முறையை அளித்துள்ளது மற்றும் அவற்றின் பயன்பாடுகள், செயல், நிர்வாகத்திற்கு சரியான அதிகாரம் மற்றும் ஊழியர்களை அளிக்குமாறு கூறப்பட்டுள்ளது. அரசியல் அமைப்பு விதி **73**வது மற்றும் **74** வது திருத்தங்கள் **1993**ல் நடைமுறைக்கு வந்து 'பஞ்சாயத்து ராஜ்' ஏற்படுத்தப்பட்டது, வரலாற்றில் ஒரு மைல் கல் என்று கூறலாம்.*

*கருநாடகத்தில் விடுதலைக்கு முன் அநேக உள்ளூர் சுய அரசுகள் ஆட்சி செய்து கொண்டிருந்தன என்று தெரியவந்துள்ளது. நாடு விடுதலை அடைந்த பின் உள்ளூர் சுய அரசுகளை பலத்துடன் நமது அரசு பல்வேறு குழுக்களை அமைத்து அறிவுரைக்கூறி அவைகளை அரசுடன் இணைத்துக்குகண்டது.*

©KTBS Not to be republished

1983 ஆம் ஆண்டு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை வெளியிட்டு 1985ல் நடைமுறைக்கு வருமாறு கருநாடக மாநிலம் கை கொண்டது. இச்சட்டத்தின் படி மாவட்ட அளவில், மாவட்ட பஞ்சாயத்துகள் தாலூக்கா மட்டத்தில் தாலூக்கா பஞ்சாயத்துகள், மற்றும் கிராம மட்டத்தில் கிராம பஞ்சாயத்துகள் தேர்தல்கள் மூலமாக அமைக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. 1983ல் சட்டத்தை இன்னும் சிறிது பலப்படுத்த 1993ல் பஞ்சாயத்து சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இத்திருத்தத்தில் கிராம சபைகள் அமைப்பதற்கு வாய்ப்பளித்து, கிராமவளர்ச்சிக்கு அனுகூலமாகுமாறு அநேக திருத்தங்களை கருநாடக பஞ்சாயத்து ராஜ் சட்டம் நடைமுறைப் படுத்தியுள்ளது.

**உள்ளாட்சி, சுயாட்சிகளின் நோக்கங்கள்**

- உள்ளூர் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள உள்ளூர் மக்களையே பயன் படுத்திக்கொள்வது.
- சாதாரண மக்களுக்கு நிர்வாகத்தைப்பற்றிய அறிவை அளிப்பது.
- அதிகாரத்தைப் பரவலாக்கி நிர்வாகத்தை அதிக பயன்பாடு உள்ளதாகச் செய்வது.
- கீழ்மட்ட அளவில் மக்களக்குத் தலைமை ஏற்று நடத்தும் பண்பைவளர்ப்பது. தலைமையின் குண நலன்களை அபிவிருத்தியடையச் செய்வது. அல்லது பயிற்சி அளிப்பது.

**உள்ளூர் சுயாட்சி அரசுகளின் செயல்கள்**

உள்ளூர் சுயாட்சி அரசுகளில் உள்ள மாவட்ட (ஜில்லா) பஞ்சாயத்து. தாலூக்கா பஞ்சாயத்து மற்றும் கிராம பஞ்சாயத்துகளின் செயல்கள் வெவ்வேறாக இருக்கும், அவ்வாறான செயல்கள் வெவ்வேறாக இருக்கும், அவ்வாறான செயல்கள் பெருமளவிலிருக்கும். அவைகளில் முதன்மை மற்றும் சாதரண செயல்களென்றால் :

- பஞ்சாயாத்தின் சொத்துக்களை காப்பாற்றிக் கொள்வது.
- உள்ளூர் மன்றங்களின் ஆண்டுக்கு தேவையான பட்ஜெட் தாயாரிப்பது.
- ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலன் திட்டங்களை மேற்கொள்வது.
- சாலைகள் அமைத்தல், மின்சாரம் அளிப்பது, குடியிருப்புகள், கட்டுதல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல் போன்ற அபிவிருத்தி வேலைகளுக்கு செயல் திட்டம் ஏற்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வருவது.
- துவக்கப்பள்ளி (ஆரம்பப் பள்ளி நடுநிலைப்பள்ளி முதியோர்கல்வி மற்றும் முறைசாராக்கல்வி போன்றன வற்றை ஊக்கப்படுத்திச் செயல்படுத்துதல்.
- வாழும் பகுதியைத் தூய்மையாகவும் உடல் நலக்கேடுகள் வராமலும் காத்துக் கொள்ளல்.
- எந்தவிதமானபாகு பாடுகளும் இன்றி உடல் நலனைப போற்றும் வசதிகளைத் தருதல்.


©KTBS Not to be republished

- அடிப்படை உணவுத் தானியங்கள் மற்றும் மண்ணெண்ணெய் போன்றன வழங்குவதற்கு முறையான வாய்ப்புக்கள் அளித்தல்.
- பிறப்பு இறப்புப் பற்றிய பதிவுகளை முறையாக உறுதிப்படுத்துதல்.
- வேளாண்மை, கால்நடைவளர்ப்பு, காதி மற்றும் கைவினைப் பொருட்தொழிற் சாலைகளுக்கு ஊக்கம் அளித்தல்.
- மண், நீர் மற்றும் காடுகள் போன்றன பாதுகாக்கத் திட்டங்கள் இடுதல்.
- உழவர்களுக்கு உதவவேளாண்மை விரிவுத்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்.
- தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர், வறுமையுற்றோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் நலன்களுக்கு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- சந்தைக் கூடங்கள், தெருவிளக்குகள் மற்றும் படிப்பகம் போன்ற வசதிகளை வழங்கல்.
- வரிகள், கட்டணங்கள், ஒறுப்புகள் (Penalities) போன்ற பணத்தொகைகளை வசூலித்தல்.
- அரசின் நலத்திட்டங்கள் மற்றும் பல்வேறு செயல் திட்டப்பணிகளைக் குறித்து அறிதல்.

**வருமானத்தின் மூலங்கள்**

உள்ளாட்சி அமைப்புகள் பற்பல திட்டங்களைச் செயல்படுத்த நிதிதேவைப் படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளின் வருமானத்தின் மூல ஆதாரங்களை வருமாறு.

- குடிநீர், உடல்நலம், கல்வி, நூலகம் மற்றும் படிப்பகம் போன்றவைகளின் வரிகளின் தொகைகள்.
- கட்டடம், மனை, வணிகவளாகங்கள், சந்தைக் கூடங்கள், பொழுதுபோக்கு, மகிழ்வகங்கள், மற்றும் விளம்பர அமைப்புகள் போன்றனவற்றின் வரிகளின் தொகைகள்.
- சுற்றுலாத்தலங்கள் செலுத்தும் வரி.
- உள்ளாட்சியமைப்புகளின் சொத்துக்கள் மூலம் பெறப்படும் வாடகை மற்றும் குத்தகைத் தொகை.
- மாநில அரசிடம் இருந்து பெறுப்படும் நிதியுதி.



கிராம சபை


**உள்ளாட்சி அமைப்புகளின் உட்பிரிவுகள்**

**கிராமசபை (ஊரவை)**

கிராமசபை என்பது ஊர் அவையாகும். ஊர் அவைக்கு தேர்தல் முறைகள் இல்லை. ஒவ்வொரு ஊரின் 18 வயது நரம்பிய

©KTBS Not to be republished

**கருநாடகத்தில் பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் வரை படம்.**




ஊரவையின் உறுப்பினர்கள் சேர்ந்தது கிராமசபை

(கருநாடகத்தில் 6072 ஊர்ப்பஞ்சாயத்துக்கள் உள்ளன)

கிராமங்கள் 5000 - ல் இருந்து 7000 மக்கள் தொகை.

சிற்றூர்கள் சேர்ந்து கிராம பஞ்சாயத்து அமைகிறது

ஒவ்வொரு 400 குடியிருப்பார்கள் சேர்ந்தது-1 ஊர்ப் பகுதியின் உறுப் பினர் ஆவர்.

கிராமப் பஞ்சாயத்தின் ஆட்சிக்காலம் 5 ஆண்டுகள் (முதல்கூட்டம் கூடிய நாளிலிருந்து 5 ஆண்டுகள்)

அனைவரும் ஊர் அவைக்கூட்டத்தில் பங்குகொள்ளலாம். ஊர் அவைக் கூட்டத்திற்கு ஊர் ஆட்சித்தலைவர் தலைமை வகிப்பார். குறைந்த அளவு ஆறுமாதத்திற்கு ஒரு முறையாவது ஊர் அவைக்கூட்டம் நடைபெறல் வேண்டும். ஊரவைக் கூட்டத்தில் அவ்வூர்ப்

©KTBS Not to be republished

பிரச்சனைகள், விவாதிக்கப்பட்டு ஊர் நலத்திட்டத் திட்டங்கள் தீட்டப்படுகிறது. அரசின் நலத்திட்டங்கள் பயனாளிகளுக்குச் சென்றடைவதைப் பரித்துரைக்கிறது.

***ஊர்ப்பஞ்சாயத்து :*** மக்கள்தொகையின் என்ணிக்கையைப் பொறுத்து ஊர்ப்பஞ்சாயத்து அமைகிறது. ஊர் அல்லது ஊர்களோ சோர்ந்து-5000ல் இருந்து 7000 வரைமக்கள் தொகை இருப்பின் அது / அவை ஊர்ப்பஞ்சாய்த்து ஆகும். வட மற்றும் தென் கன்னடப் பகுதிகளும் மலைநாடும் 2000 மக்கள்தொகையளவிலேயே ஊர்ப்பஞ்சாயத்து என்று ஆகிறது. ஊர்ப் பஞ்சாயத்தின் உறுப்பினர்களை அப்பகுதியில் வாழ்வோருள் வயதுவந்தோரால் தேர்ந்து எடுக்கப்படுவர். 400 வாக்கார்களுக்கு ஓர் உறுப்பினர் என்ற முறையில் தேர்தல் நடைபெறும். தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தபடோர், பழங்குடியினர், பிறபடுத்தப்பட்டோர் மற்றும் பெண்களுக்கு என தனித்தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

| |
|---|
| பஞ்சாயத்து ராஜ்-2000 ஆண்டு, இரண்டாம் சட்டத் திருத்தத்தின்படி ஒரு பஞ்சாயத்து உறுப்பினரின் வீட்டில் கண்டிப்பாக கழிவறை வசதியைப் பெற்றிருக்க வேண்டும். அவ்வுறுப்பினர் அத்தகைய கழிவறை வசதி பெற்றிருக்கவில்லையாயின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓராண்டிற்குள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். |

ஊர்ப்பஞ்சாயத்துக் கூட்டம் இரண்டுமாதங்களுக்குள் ஒரு முறையாவது நடைபெற வேண்டும். மூன்றில் ஒரு பகுதியினராவது கூட்டத்தில் கலந்து கொண்டு திட்டங்கள் வகுக்கவேண்டும். அனைத்து ஊர்ப்பஞ்சாயத்து உறுப்பினர்களும் சேர்ந்து 30 மாத காலத்திற்கான தலைவர், துணைத்தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஊர்ப் பஞ்சாயத்துக் கூட்டத்திற்கு ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவர் தலைமைவகிப்பார். அவருடைய வருகை இல்லாதபோது துணைத் தலைவர் கூட்டத்திற்குத் தலைமை ஏற்று ஆழ்ந்து ஆராய்வார். தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிக்கு ஒதுக்கப்பட்ட கொள்கைக்கு உட்படுவர். ஊர்ப்பஞ்சாயத்துகள் திறமையான நிருவாகத்திற்கு என ஒரு தனிநிலைக்குழுவினை அமைக்கும்.

ஒரு முழு நேரப் பணியாளரான செயலர் ஊர்ப்பஞ்சாயத்தின் நிருவாகப் பணிகளைக் கவனித்திட அமர்த்தப் படுவார். தற்போது கருநாடகமா நிலப் பொதுப்பணித்துறையால் பஞ்சாயத்து வளர்ச்சித்துறை அதிகாரி ஒருவர் அமர்த்தப்படுகிறார்.

***வட்டப் பஞ்சாயத்துக்கள் :*** *1993* - ஆம் ஆண்டின் பஞ்சாயத்து ராஜ் கூட்டத்தின் படி வட்டார அளவில் ஒரு வட்டப் பஞ்சாயத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. வட்டப்பஞ்சாயத்து தகுதியான வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. வட்டத்தின் மக்கள் தொகை அடிப்படையில் பஞ்சாயத்தின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர். ஒவ்வொரு பத்தாயிரம் வாக்காளர்களுக்கு ஒரு உறுப்பினருக்குத் தேர்தல் நடைபெறும்.

தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், பிற்படுத்தப் பட்டடோர் மற்றும் பெண்களுக்கு என தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட்டும். இதற்கிடையில் ஊர்ப்பஞ்சாயத்துக்களின் தலைவர்களில் 5-இல் ஒருவர் வட்டப் பஞ்சாயத்தில் உறுப்பினராகப் பணியாற்றுவார். தலைவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்கள் ஒராண்டுகாலத்திற்கு



©KTBS Not to be republished

சுழற்சி முறையில் தலைமைக்கு நியமிக்கப் படுவர். வட்டப்பஞ்சாயாத்து உறுப்பினர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். அவர்கள் தம்பதவியைத் துறக்கும் உரிமையும் உண்டு ; அல்லது அரசால் பதவி நீக்கம் செய்யப் படுவதும் உண்டு. வட்டப் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர் (M.L.A.) சட்டமேலவை உறுப்பினர் (M.L.C.) மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் (M.P.s) கலந்து கொள்ளலாம்.

வட்டப் பஞ்சாயத்து கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையாவது கூட்டப்படவேண்டும். தேவைப்படுமாயின் சிறப்புக் கூட்டமும் நடைத்தலாம். வட்டப்பஞ்சாயத்தின் தலைவர் கூட்டத்திற்குத் தலைமை ஏற்பார். அத்தலைவரின் வருகை இல்லாதபோது துணைத்தலைவர் கூட்டத்தை வழி நடத்துவார். 20-மாதத்திற்கான தலைவர் மற்றும் துணைத்தலைவர் வட்டப் பஞ்சாயத்து உறுப்பினர்களால் தேர்ந்து எடுக்கப்படுவர். திறமையான நிர்வாகத்திற்கு சிறப்பு நிலைகுழுக்கள் அமைக்கப்படும். அரசு செயலர்க்க அதிகாரி ஒருவரை பணியமாத்தி வட்டப் பஞ்சாயத்து செயலாக்கப் பணிகளை கவனித்துக்கொள்வார். வருவாய் வழிகளில் அவருடைய அதிகாரம் குற்றவியல் நடுவருக்கு (Magistrate) இணையானது. உள்ளாட்சி அமைப் புகளின் பணிகளுக்கும் கூடுதலாக வட்ட பஞ்சாயத்துக்கள் குறிப்பிட்ட பணிகளை ஆற்றும். அவர்கள்

- கிராம பஞ்சாயத்துக்களின் ஆண்டு திட்டத்தை தொகுத்து வட்ட பஞ்சாயத்திடம் வழங்கல்.
- மாநில அரசு அல்லது மாவட்ட பஞ்சாயத்து ஆலோசித்த அல்லது ஆணையிட்ட எல்லா நலத்திட்டங்களையும் நடைமுறைப் படுத்துதல்.

### மாவட்ட பஞ்சாயத்து

மாவட்ட அளவில் மாவட்ட பஞ்சாயத்துக்கள் நிர்வாகத்தை நடத்திகொள்வதற்காக அமைக்கப்படுகிறது. முற்காலத்தில் அவை மாவட்டவாரியம் என அழைக்கப்பட்டன. மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் அம்மாவட்ட மக்களால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்படுவர். மக்கள் தொகையின் அளவிற்கு ஏற்ப ஒவ்வொரு மாவட்டத்திலும் உறுப்பினர்கள் எண்ணிக்கை வேறுபடும். தென் கன்னடாவில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் உறுப்பினர் என்றும் குடகுவில் (Coorg) 18,000 மக்கள் தொகைக்கு ஓர் உறுப்பினர் என்றும் பிறபகுதிகளில் 40,000 எண்ணிக்கைக்கு ஓர் உறுப்பினர் என்றும் தேர்ந்தெடுக்கப்படுவர். வட்ட பஞ்சாயத்தின் தலைவர்களுடன் சட்டமன்ற மேலவை மற்றும் நாடாளுமறை உறுப்பினர்களும் இதன் கூடுதலான உறுப்பினர்களாவர். அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கலாம். தாழத்தப்பட்ட, பழங்குடியினர், பிறபட்டோர் மற்றும் பெண்கள் ஆகியோர்களுக்கு தனித்தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றன. உறுப்பினர்களின் பதவிகாலம் ஐந்தாண்டுகள் ஆகும்.

மாவட்ட பஞ்சாயத்து கூட்டங்கள் குறைந்த பட்சம் இரு மாதங்களில் ஒருமுறை கூட்டவேண்டும். மாவட்ட பஞ்சாயத்து தலைவர் ஜில்லா அத்யாக்சா எனப்படுகிறார். கூட்டங்கள் இவர்தலைமையில் நடைபெறுகிறது. இவர் கலந்து கொள்ள முடியாத வேளையில் துணைத்தலைவர் கூட்டத்தை நடத்துவார். இயற்கை பேரழிவு காலக்கட்டத்தில் நிவாரணத்திற்கு தலைவர் ஒரு லட்சம் ரூபாய்வரை செலவிட அதிகாரம்

உள்ளவராவார். ஐந்து சிறப்புநிலை குழுக்கள் மாவட்ட பஞ்சாயத்தின் திறமையான நிர்வாகத்திற்காக அமைக்கப்படுகிறது.

முதன்மை செயல் அதிகாரி மாவட்ட ஆணையர் அவர்களுக்கு இணையான அதிகாரத்தை கொண்டவராவார். அவர் மாவட்ட பஞ்சாயத்து கூட்டங்களில் கலந்துகொண்டு விவாதித்தாலும் ஆணையருக்கு வாக்களிக்க உரிமை இல்லை.

மாவட்ட பஞ்சாயத்து ஒரு மாவட்ட அரசைப் போன்றதாகும். அது மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களை செயல்படுத்தும்போது பரந்த அதிகாரத்தை கொண்டுள்ளது. அரசின் அனைத்து வளர்ச்சி திட்டங்களு மாவட்ட பஞ்சாயத்து வழியாகவே செயல்படுத்தப் படுகின்றன. இதனுடன் மேலும் பல கூடுதல் பணிகளையும் புரிகிறது. அவைகள் :

- ஊர், வட்ட மற்றும் மாவட்ட பஞ்சாயத்துக்கள் மத்தியில் வெற்றிகரமான, நடைமுறைக்கு நம்பிக்கையை உருவாக்கி அரசு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்பட வழிவகுக்க வேண்டும்.
- திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படவும் அவற்றை மேற்பார்வையிடவும் அனைத்து துறைகளுடன் ஒத்துழைப்பை ஏற்படுத்த வேண்டும்.
- கூட்டுறவு சங்கம், கூட்டுறவு வங்கி இன்னும்பிற நிறுவனங்களுக்கு ஊக்கத்தையும் ஒத்துழைப்பையும் நக்கவேண்டும்.
- அரசின் வழிகாட்டுதலுடன் பணியை செயல் படுத்துவது.

*1993*-ம் ஆண்டு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின்பதேர்தலை நடத்த மாவட்ட அளவில் ஒரு தனி தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கருநாடகத்தில் ஊர், வட்ட மற்றும் மாவட்ட பஞ்சாயத்து தேர்தல்களை நடத்த ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

### நகர உள்ளாட்சி அமைப்புகள்

மாநிலத்தில் பல நகரங்களும் மாநகரங்களும் உள்ளன. நகரங்கள் மற்றும் மாநகரங்கள் நகர்புறப் பகுதிகள் என வகுக்கப்படுள்ளன. நகர்புறங்களில் மக்கள் கல்வி, நலம், போக்குவரத்து, குடிநீர், சுற்றுபுற தூய்மை மற்றும் பொழுதுபோக்கு போன்ற சிறப்பான வசதிகளை பெற்றுள்ளனர். அதே வேளையில் நகர்ப்புறங்களில் பல பிரச்சனைகளும் உள்ளன. அந்தப் பிரச்சனைகளை தீர்க்கும் பொருட்டும் நல்ல பாதுகாப்பை வழங்கவும் நகர உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவைகளுள் மூவகை நகர அமைப்புகள் உள. அவைகள் :

- நகர மாநகராட்சி (Mahanagar Palike)
- நகராட்சி
- தண்டுப்பகுதி அமைப்பு (இராணுவ கட்டுப் பாட்டில்) 9

மக்கள்கொகை, வருமானம் போன்றவற்றின் அடிப்படையில் குறிப்பிட்ட பகுதிகளை மாநகராகவோ அல்லது நகராகவோ அறிவிக்க மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு, இந்த நகர உள்ளாட்சி அமைப்புகள் பல பணிகளையுடையது. அவைகள் :

© KTBS Not to be republished

- நிதிநிலை அறிக்கையை தயார்செய்து மன்றத்திடமிருந்து ஒப்புதலை பெறுதல்.
- மாநகர் மற்றும் நகரங்களின் அனைத்து நிர்வாகத்தையும் கண்காணித்தல்.
- சிறந்த நகரத்திட்ட முறையை தயாரித்து செயல்படுத்துதல்.
- சாலைகள், போக்குவரத்து, நீர், மின்சாரம், கல்வி, சந்தைகூடம் மற்றும் உடல் நலம் போன்ற வசதிகளை ஏற்படுத்துதல்.
- சிறந்த கழிவுநீர் முறை மற்றும் கழிவுகளை அகற்றி தூய்மையை ஏற்படுத்துதல்.
- கட்டட கட்டுமானம், உள்ளாட்சி கட்டிடங்களையும் சொத்துக்களையும் பாதுகாத்திட அனுமதி வழங்கல்.
- பிறப்பு இறப்பு போன்றவற்றை பதிவுசெய்தல்
- பூங்காக்கள், விளையாட்டு மற்று பொழுதுபோக்கு வசதிகளை வழங்கல்.
- குடிசைப்பகுதியினரின் வாழ்க்கையை மேம்படுத்துதல்.
- குழந்தைகள் நலமையம், அனாதை இல்லம், முதியோர் இல்லம், பிச்சைக்காரர் குடியமர்த்தல் மற்றும் போன்றவற்றை அமைத்தல்.
- நீச்சல்குளம், விளையாட்டு மைதானம், அருங்காட்சியகம், பேருந்து நிலையம், படிப்பகம், பொது நூலகம், கால்நடை மருத்துவமனை, பண்பாட்டு அரங்கம், மொத்த வணிக வளாகங்கள் மற்றும் இடுகாடு போன்றவற்றையமைக்க திட்டமிடுதல்.
- மழை நீரை சேமித்தல்.
- பண்பாட்டு நிகழ்ச்சிகளை ஊக்கப்படுத்துதல்.
- பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை ஆகியோர் முன்னேற்றத்திற்கு நடைவடிக்கைகள் எடுத்தல்.
- பசுமையை வளர்த்தல், தூய்மை மற்றும் அழகாக நகர் மற்றும் மாநகரங்களை நிர்வகிக்க நவடிக்கைகள் எடுத்தல்.

### வருமானத்தின் மூல ஆதாரங்கள்

நகர்புறங்களை மேம்படுத்தவும் பல திட்டங்களை செயல்படுத்யிதவும் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிதேவைப் படுகிறது. கட்டடம், காலிமனைகள், கடைகள் மற்றும் வாணிக வண்டிகள் போன்றவைகளின் வரியே மிக முக்கியமான வருவாய் ஆகும். நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கட்டிடங்களில் வாடகைக்கு விடப்பட்ட அலுவலகம், சந்தை கூடம், அங்காடிகள் மற்றும் நகரவிடுதிகள் ஆகியவற்றிடமிருந்து வசூலிக்கப்படும் வரியும் வருமானமாக உள்ளது. நீர், சந்தை மற்றும் பொழுதுபோக்கு நிறுவனங்களின் மேல் விதிக்கப் படும் வரியும் வருமானமாக உள்ளது. அரசால் வழங்கப்படும் நிதியுதவியால் உள்ளாட்சி அமைப்புகளில் நலப்பணிகளை மேற்கொள்ள பேருதவியாக உள்ளது.

©KTBS Not to be republished

*நகர வள்ளாட்சி அமைப்புகளில் அடங்குவன*

*நகராட்சி அ—ல்லது மாநகராட்சி*

*மக்கள் தொகையைப் பொருத்து நகர் மற்றும் மாநகர் என்று நகர்புறப்பகுதிகள் பிரிக்கப்படுகின்றன. 20,000 லிருந்து 50,000 வரை மக்கள் வசிக்கும் பகுதி நகரம் எனப்படுகிறது. நகராட்சி அப்பகுதிகளை ஆட்சிபுரியும் அமைப்பாகும். அதேபோல 50,000 லிருந்து மூன்று இலட்சம்பேர் வசிக்கும் பகுதி மாநகர் எனப்படுகிறது. அப்பகுதியை ஆட்சிபுரியும் அமைப்பு மாநகராட்சி எனப்படுகிறது. நகர் மற்றும் மாநகர் பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், நகராட்சிமன்ற உறுப்பினர்கள் எனப்படுகின்றனர். நகராட்சி மன்ற உறுப்பினர்கள் நேரிடையாக அப்பகுதிமக்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். மக்கள் தொகைக்கு ஏற்ப மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை வேறுபடுகிறது. நகராட்சியில் 23 லிருந்து 27 உறுப்பினர்களையும் மாநகராட்சியில் 31 லிருந்து 37 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இதற்கிடையில் அரசு நிர்வாகத்தில் சிறந்த அனுபமும் ஆழ்ந்த அறிவுடைய ஐவரை தேர்ந்தெடுக்கிறது. இந்த ஐவர் கூட்டங்களில் கலந்துகொண்டு விவாதிக்கலாமேயொழிய அவர்களுக்கு வாக்களிக்க உரிமை இல்லை. அவ்வட்டார சட்டமன்ற உறுப்பினர், மேலவை உறுப்பினர், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கலந்துகொண்டு வாக்களிக்கலாம். உள்ளாட்சி அமைப்புகளின் சட்டவிதிகளின்படி தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிறபடுத்தப் பட்டோர் மற்றும் பெண்களுக்கும் தனித் தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகியோர் தலைமை வகிப்பர். அவர்கள் நகராட்சி மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். தலைவர் மன்றக் கூடங்கள் அமைதியாக நடைபெற உதவுகிறார். தலைவர் வருகை இல்லாதபோது துணைத் தலைவர் கூட்டத்தை வழிநடத்துவார். நகர உள்ளாட்சி அமைப்புகளின் பதவிகாலம் ஐந்தாண்டுகள் ஆகும். சிறப்பு சூழ்நிலைகளில் அரசுக்கு பதவிகாலத்தை நீட்டிக்க அதிகாரம் உண்டு. உள்ளாட்சி அமைப்புகளின் இயல்பான மற்றும் திறமையான நிர்வாகத்திற்கு நான்கு சிறப்பு நிலை குழுக்கள் அமைக்கப்படுகின்றன. முதன்மை அதிகாரியாக செயல்படுகிறார். அவர் அரசால் பதவி அமர்த்தப்படுகிறார். அவர் குழுவுக்கு ஆலோசனை வழங்கி நகராட்சி செயல் திட்டத்தை கண்காணிக்கிறார்.*

*மாநகராட்சி அல்லது பெருமாநகராட்சி (மகா நகரபாலிகே):*

*1976 ம் ஆண்டு கர்நாடக முனிசிபல் கார்பரேஷன் சட்டத்தின்படி மாநகராட்சி அல்லது பெருமாநகராட்சி அமைப்பு அமைக்கப்பட்டது. இரண்டு இலட்சம்பேர் வசிக்கும் பகுதியாகவும் ஒரு கோடிக்குமேல் வருமானமுள்ள பகுதி மாநகராட்சி என்றும் மகாநகரபாலிகே (பெரு மாநகராட்சி) என்றும் அமைக்கப்படுகிறது. மாநகராட்சியின் உறுப்பினர்கள் மாநகராட்சி உறுப்பினர்கள் (Corporators) எனப்படுகின்றனர். மாநகராட்சியில் மக்கள் தொகைக்கு பிற உறுப்பினர் எண்ணிக்கை திட்டமிடப்படுகிறது. மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 30க்கு குறையாமலும் 300 க்கு அதிகப் படாமலும் இருக்க வேண்டும்.*

©KTBS Not to be republished

கருநாடக மாநிலத்தில் ஏழு நகராட்சிகளும் மேலும் மாநகராட்சியும் உள்ளன. அவை: 1. மைசூரு 2. ஹுப்பள்ளி-தாரவாட, 3. பள்ளாரி 4. பெளகாவி, 5. கலபுரகி, 6. தாவணகெரெ, மேலும் பெங்களூரு நகராட்சியை பெருமாநகராட்சி (BBMP) என்று அழைக்கப்படுகிறது. பெருமாநாகராட்சி பெங்களூரு பெருமாநகராட்சி (BBMP) யில் மொத்தம் 198 பேர் மாநகராட்சி உறுப்பினர்களாக உள்ளனர்.

நகரங்கள் சிறு சிறு தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்பட்டு அல்லது வார்டுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வார்டிலும் ஒரு நகராட்சி உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவ்வுறுப்பினர்கள் நேரடியாக தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நகராட்சிகளிலும் கூட விதிகளின்படி தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பின்தங்கியபிரிவினர் மற்றும் பெண்களுக்கு இட ஒதுக்கீடும் அனுமதிக்கப் படுகிறது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருடன் மாநில அரசும் நகர திட்டம், கல்வி ஆரோக்கியம், உள்ளாட்சியில் உள்ள அறிவு சார்ந்த ஐந்து உறுப்பினர்களை உறுப்பினர்களாக நியமிக்கிறது. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு ஓட்டளிக்கும் உரிமை இருப்பதில்லை. ஆனால் கூட்டங்களில் பங்கேற்று அங்கு நடைபெறும் அலுவல்களில் பங்கேற்பது மற்றும் ஓட்டளிக்கும் உரிமையுள்ளது. நகராட்சியின் பதவி காலம் ஐந்தாண்டுகள் ஆகும், விசேஷ சந்தர்ப்பங்களில் மாநில அரசு குறைந்தது ஒரு ஆண்டு காலம் வரையில் நிடிக்க வாய்ப்புண்டு.

மேயர் மற்றும் துணை மேயர் நகராட்சியின் தலைவர்களாவர் இவர்கள் நகராட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கபடுகின்றனர். இவர்களுடைய பதவிக்காலம் ஓராண்டாகும். மேயர் நகராட்சி கூட்டங்களில் தலைமை தாங்கி, கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துகிறார். மேயர், நகராட்சி அதிகாரியை செயலாற்றுமாறு செய்வார், திறமையான நிர்வாகம், நிலைக்குழுக்களை உருவாக்கி செயல்படவைப்பார்.

2011ல் கருநாடக நகராட்சி விதிகளில் திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளது. இத்திருத்தங்களின்படி சட்டத்திருத்தம் பெங்களூரை உட் கொண்ட கருநாடகத்தின் ஏழு நகாராட்சிகளுக்கும் பொருந்துகிறது. விதிகளின்படி நகராட்சி அலுவல்களில் சமூதாயம் பங்கேற்கும் வாய்ப்பை அளித்துள்ளது. இவ்விதியின்படி ஒவ்வொரு நகராட்சியும் பகுதி அல்லது பிரதேச கூட்டங்கள் மற்றும் மண்டல சபை (Ward Committe)கள் என்று இரண்டு அதிக மண்டலங்களைக் கொண்டிருக்கும். இம்மண்டலங்கள் நகராட்சியயின் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்திக்கொண்டிருக்கும்.

நகராட்சியின் செயல்களை நகராட்சியின் ஆணையர் பார்த்துக்கொள்வார். பொதுவாக இந்திய ஆட்சியியல் சேவை (IAS) அதிகாரியே இப்பதவியை ஏற்பார். இவருடைய பதவிக்காலம் மூன்றுாண்டுகளாகும். இவரை மாநில அரசு நியமிக்கிறது. நகராட்சியின் ஆணையர் அனைத்து செயல்களிலும் பங்கேற்று தேவையான விவரங்களை அளிப்பார். ஆணையர் மேயருடன் இணைந்து நகராட்சியின் தீர்மானங்களை செயல் வடிவில் கொண்டுவருவார்.

©KTBS Not to be republished

## பயிற்சிகள் :

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. தற்போது நடைமுறையில் இருக்கும் கருநாடக பஞ்சாயத்து ராஜ் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ________
2. ஓர் ஊரில் உள்ள எல்லா வாக்காளர்களும் பங்கு பெறும் ஊர்க்குழுவிற்கு ________ ________ என்று பெயர்.
3. ஊர்ச் சபைத் தலைவர்களைத் வட்டப்பஞ்சாயத்தில் ________ அமைப்பில் தேர்ந்தெடுப்பர்.
4. வட்டப்பஞ்சாயத்தில் ஒவ்வொரு நாட்களின் பணிகளையும் மேற்பார்வையிட அரசால் பணியமர்த்தப்பட்ட அலுவலருக்கு ________ என்று பெயர்.
5. கருநாடகத்தில் பெங்களூர் பெருமாநகராடச்சியையும் உள்ளடக்கிய நகராட்சிகளின் மொத்த எண்ணிக்கை ________ ________

**II. வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடையளிக்க :**

1. சுய உள்ளாட்சி அமைப்புக்களின் நோக்கங்கள் யாவை ?
2. உங்கள் பகுதியில் உள்ளாட்சிக்குழு எவ்வாறு உருவானது ?
3. உள்ளாட்சிக் குழுவின் செயல்களை குறிக்க.
4. உள்ளாட்சிக் குழுவிற்கான வருவாய் மூலங்கள் யாவை ?
5. உள்ளாட்சிக்குழுக்களில் ஓட்டுரிமை உடையோர், ஓட்டுரிமை இல்லாதோர் போன்றோரைப் பட்டியல் இடுக.
6. உள்ளாட்சிக் குழுக்களில் எலைக்குழுக்களை அமைக்கத் தேவையான காரணங்கள் யாவை ?
7. உள்ளாட்சிக்குழுக்களில் ஒதுக்கப்பட்ட குழு உறுப்பினர்களின் பட்டியல் யாது ?
8. நகரம், மாநகரம் என்று பிரித்தறிய குறிப்பிடப்பட்ட மக்கள் தொகையளவு என்ன ?
9. கருநாடகத்தில் 'பஞ்சாயத்துராஜ்' அமைப்பில் உள்ள மூன்று உட்கூறுகள் (tiers) யாவை ?

**III. முன்யோசனைச் செயல்பாடு :**

1. உங்கள் பகுதியில் நிலவும் சிக்கல்களைக் குறித்த பிரச்சனைகளை உங்கள் ஊர்க் குழுவின் தலைவரையோ அல்லது உறுப்பினர், ஒரு வரையையோ உம் பள்ளிக்கு வரவேற்று அவற்றைத் தீர்வு செய்யும் வழிகளைத் திட்டமிடுக.

©KTBS Not to be republished

2. உங்கள் பகுதியின் உள்ளாட்சிக் குழுவின் உறுப்பினராக உங்களை நினைத்துக் கொண்டு, உங்கள் பகுதியில் உள்ள குறைகளைத் தீர்க்க எவ்வித நடவடிக் நடவடிக்கைகளை மேற்கொள்வீர் ?

3. உங்கள் ஆசிரியரின் உதவியுடன் உங்கள் வகுப்பிலேயே ஓர்மாதிரி உள்ளாட்சிக் குழுவை அமைத்து நடத்தவும்.

4. உள்ளாட்சிக் குழுவில் ஓர் ஒதுக்கப்பட்ட உறுப்பினருக்கான இடம் குறித்து கலந்துரையாடுக.

**IV. கருதத்தூண்டும் திட்டப்பணி :**

1. மிகப் பழங்கால இந்தியாவில் இருந்த உள்ளாட்சிக் குழுக்கள் எவ்வாறு செயல்பட்டன என்பதற்கான செய்திகளை ஆய்ந்து தொகுக்க.

2. உங்கள் பகுதியில் உள்ள தீர்க்கக் கூடிய குறைகளுக்கான வழிமுறைகளை எவ்விதம் செய்ய வேண்டும் என்று ஆய்ந்து தொகுக்கவும்.

3. நீங்கள் வாழும் பகுதியின் குறை நிறைகளைக் கவனித்துக் குறித்துக்கொள்ளவும். ஓர் அறிக்கை தயாரிக்கவும். அவ்வறிக்கையில் அரசு செய்த வசதிகளையும் செய்யப்பட்ட வசதிகளையும் மக்கள் பெற்றுக் கொண்டு அடைந்த நன்மைகளையும் அந்த அறிக்கையில் குறிப்பிடவும்.

4. உள்ளாட்சிக் குழுவின் 5(அ) 6 உறுப்பினர்களை நேர்காணல் செய்து (Interview) அவர்கள் தம்தம் தொகுதிகளுக்கு முன்னேற்றத்திற்கான வழிகளில் செய்தவற்றையெல்லாம் தொகுத்து ஓர் அறிக்கை ஏற்படுத்தவும்.

✻ ✻ ✻ ✻ ✻

©KTBS
Not to be republished

# சமுதாய இயல் (Sociology)

## அத்தியாயம் 1
# சமுதாய அமைப்புகள்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.**

- *சமுதாய அமைப்புகளின் பொருள், அமைப்பு மற்றும் மகத்துவம்*
- *மனிதன் மற்றும் சமுதாய அமைப்புகளின் உறவுகள்*
- *சமுதாய அமைப்புகளின் பங்கு மற்றும் செயல்கள். (குடும்பம், திருமணம், சமயம்)*

**சமுதாய அமைப்புகளின் பொருள், நோக்கம் (உருவ) குணங்கள் மகத்துவம் :**

சமுதாயத்தை அறிந்து கொள்ள நமக்கு சமுதாய அமைப்புகள் அவசியம். நம்முடைய வாழ்க்கையின் அடிப்படை அவசியத்தை ஈடேற்றுவதில் சமுதாய அமைப்புகள் முக்கியபங்கு வகிக்கின்றது, சமுதாய அவசியத்தின் சுற்றிலும் உருவாகி உள்ள நீதி நேர்மை, மதிப்பு, அந்தஸ்துகள் வகிக்கும் பண்பை ஒன்று சேர்ப்பது அமைப்பு எனலாம். இதில் அமைப்பான முறைகள், விதானங்கள், செயல்கள், நம்பிக்கைகள் இருக்கும்.

சாதாரணமாக சமூகத்தில் மக்கள் தம்முடைய விருப்பு, வெறுப்பு நிறைவேற்றிக் கொள்ள ஒன்று சேர்ந்த போது அது ஒரு அமைப்பாகிறது. இதற்கு பல நியமம் மற்றும் செயல் விதானங்கள் தேவைப்படுகிறது. சமுதாய நியமங்கள் மற்றும் கடைபிடிப்புகள் சிறிது சிறிதாக மற்றும் நிரந்தரமாக செயல்பாட்டிலிருக்கும் காரணமாக அமைப்புகள் தோன்றுகின்றன. சம்னர் மற்றும் கெல்லர் என்பவர்கள் உயிரினங்களின் சரீரத்தில் உள்ள அணுக்கள் மற்றும் உறுப்புகள் இருப்பது போன்று சமுதாயத்திற்கு உலக நியதிகள் மற்றும் அமைப்புகள் இருக்கும் என்கிறார்கள்.

நம்முடைய விருப்பு, வெறுப்புகளை ஈடேற்றிக் கொள்ள நிரந்தரமாக தோன்றியிருப்பதே அமைப்பு என்று சம்னர் கூறுகிறார். சமுதாயத்தில் இருக்கும் உலகநியதி சட்டம், குடும்ப அமைப்பு, திருமணமுறை, அரசியல் அமைப்பு முதலியவைகள் சமுதாய அமைப்புகள் ஆகும். மெக்கையர் மற்றும் பேஜ், அவர்களின் படி சமுதாய அமைப்புகள் ஒரு குழுவின் செயல் பாட்டிற்காக உருவாகியிருக்கும் அமைப்பு, சமுதாய அமைப்புகள், சமுதாய அவசியத்திற்கு அனுகூலமாக உருவாக்கப்பட்டு சமுதாயத்தினாலேயே அங்கீகாரம் பெற்றுள்ளது.

முதலில் சமுதாய அமைப்பின் குணங்களை அறிவோம். பிறகு பலவித சமுதாய அமைப்புகளையும் அவற்றின் காரியங்களை விவாதிப்போம்.

**சமுதாய அமைப்பின் குணங்கள் :**

**I. சமுதாய அமைப்பின் குணங்கள் பின் வருமாறு இருக்கும்.**

1. **பொதுவுடைமை :** சமுதாய அமைப்புகள் எல்லா சமூகத்திலும் இருக்கும். சமுதாய அமைப்புகள் மனித வளர்ச்சியை போல சரித்திரம் பெற்றவை என்றால், மனித சமுதாயத்தின் ஆரம்பம் முதல் ஏதோ ஒரு இடம் அல்லது காலத்திற்கு மட்டுமல்லாமல், எல்லா காலத்திலும் சமுதாய அமைப்புகள்

©KTBS Not to be republished

இருந்திருப்பது தெரிகிறது. உதாரணமாக குடும்பம், பள்ளி, திருமணம் முதலியன. சமுதாய அமைப்புகள் நிரந்தரமாக இல்லாமல் தம்முடைய செயல்களில் மாறிக் கொண்டிருக்கும்.

**2. சமுதாய அமைப்புகளின் நியமங்கள் :**

சமுதாய அமைப்புகளின் நியமங்கள் தம் அமைப்பின் உறுப்பினர்களின் நடவடிக்கை மீது கட்டுப்பாடுகளை செலுத்தும் வலிமையுடையது. எந்த ஒரு நபரும் சமுதாய அமைப்பின் நியமங்களுக்கு எதிராக நடந்தால், அதனை சமுதாய அமைப்புகள் கட்டுப்படுத்தும். சமுதாய நியமங்களை எல்லா உறுப்பினர்களும் தவறாமல் கடைபிடிக்க சமுதாய அமைப்பின் நியமங்கள், அமைப்பின் உறுப்பினர்களை வரைமுறைப்படுத்தும். உதாரணமாக குடும்பத்தில் பெரியவர் எந்த வேலை செய்ய வேண்டும். குழந்தைகள் எந்த வேலைகளை செய்ய வேண்டும் என்பது குடும்பங்களே உருவாக்கி கொண்டுள்ள விதிகளாகும்.

**3. அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல் :**

சமுதாய அமைப்புகள் நமது அடிப்படைத் தேவைகளான, தங்குமிடம், மக்கட்பேறு, மனிதத்தன்மை போன்ற தேவைகளின் பூர்த்திக்காக, குடும்பங்கள் இரண்டையும் சமமாக கொண்டு செல்லும். இவ்வாறு பல சமுதாயப் பிரச்சனைகள் செயல்பாட்டிலிருக்கும்.

**4. எழுத்து மற்றும் எழுத்தற்ற நியமங்கள் :**

சமுதாய அமைப்புகள் எழுத்து மற்றும் எழுத்தற்ற வடிவில் சம்பிராதயங்களை கொண்டுள்ளன. பழங்காலத்திலிருந்து வந்தபரம்பரைகள் உலகநியதி, நீதி நேர்மை, கட்டுப்பாடுகள், எழுத்தற்ற வடிவில் இருக்கும் நீதிமன்றம், அரசு, அரசியல் அமைப்பு, பள்ளிக்கூடம் போன்றவை நவீன சமுதாயம் அமைப்புகளின் நியமங்களை எழுத்து வடிவில் காணலாம்.

**5. சமுதாயத்துடன் பரஸ்பர உறவு :**

ஒரு சமுதாயத்தில் இருக்கும் எல்லா சமுதாய அமைப்புகள் பரஸ்பர பிடித்தமான சம்பந்தங்களை பெற்றிருக்கும். உதாரணமாக குழந்தைகள் நடைமுறைகளை சம்பிரதாயமாக செய்தால், பள்ளியில் புதிய புதிய கற்றலை, பள்ளிக்கூடம் சொல்லிக் கொடுக்கிறது. பள்ளியில் குழந்தைகள் வெவ்வேறு குடும்ப, சமுதாய, மொழிகளில்பின்னனியில் இருந்து வந்த மக்களுடன் வளர்கிறார்கள். தமது குடும்ப சூழ்நிலையை மீறி சமுதாயத்துடன் ஒன்றி விடுகிறார்கள். சமுதாய அமைப்புகள் வெவ்வேறாக இருந்தாலும் ஒவ்வொரு அமைப்பும் பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்ற தொடர்பு கொண்டிருக்கும். குடும்பம் மற்றும் பள்ளி என்ற அமைப்புகள் குழந்தைகள் மூலம் உறுவுகளை ஏற்படுத்தும்.

**II. சமுதாய அமைப்புகளின் மகத்துவம் :**

**1. கலாச்சாரம் ஒரு சாதனம் :** சமுதாய அமைப்புகள் உள்நாட்டு அறிவு, கலை - பேச்சு, மொழி உலகநியதி, சம்பிரதாயம், நீதி நேர்மையின் விதிகள் மதிப்பு,

©KTBS Not to be republished

சேர்ந்தது கலாச்சார அம்சங்களை ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு மாற்றுகிறது. இவ்வாறு சமுதாய அமைப்புகள் சமுதாய வாழ்க்கைக்கு மகத்துவத்தை தருகிறது.

**2. உறுப்பினர்களின் தேவைகளை பூர்த்தி செய்கிறது :**

மனிதனின் மானசீக, உடல், சமுதாயம், பொருளாதாரம் மற்றும் இயற்பியல் அவசியத்தை ஈடேற்றுவதுடன் கூடவே தன்னுடைய உறுப்பினர்கள் சமுதாய வாழ்க்கையில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை தெரிவிக்கிறது.

**3. உறுப்பினர்களின் சமுதாயநடவடிக்கைகளை உருவாக்கிறது மற்றும் கட்டுப்படுத்துகிறது.**

சமுதாயத்தில் இருக்கும் சமுதாய அமைப்புகள் நமக்கு நல்ல நடவடிக்கை கள் எது? தவறான நடவடிக்கைகள் எது? என்பதை சொல்லிக் கொடுக்கிறது. உதாரணமாக முக்கியமான சமுதாய அமைப்பான நமது பள்ளிக் கூடங்கள் நம்முடைய தினசரி நடவடிக்கைகள் என்றால் உடை அணிவதிலிருந்து, கற்றல் வரையில் எல்லா விஷயங்களையும் சொல்லி கொடுப்பதன் மூலம் நம்முடைய நடவடிக்கைகளை திருத்திக் கொண்டிருக்கும். இதே சமயத்தில் நமது சமூக நடவடிக்கைகள் சமுதாயத்திற்கு எதிராக இருந்தால் சமுதாயத்தின் விதிகளை மறந்தால், தண்டனை, கண்டனம், அபராதங்கள் மூலம் நேர்மையான அல்லது நீதியாக நடக்க தீர்மானிக்கிறது. மேலும் நமது தவறுகள் தொடர்ந்தால் சட்டத் தின் மூலம் திருத்தும். தண்டிப்பதன் மூலம் நம் சமுதாய நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகிறது. இவ்வாறு அமைப்புகள் தன்னுடைய உறுப்பினர்கள் சமுதாய நடவடிக்களை உருவாக்குவதில் மற்றும் கட்டுப்படுத்துவதில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன.

**4. சமுதாய அமைப்புகள் நபருக்கு (பங்கு) பாத்திரத்தை கொடுக்கிறது:**

சமுதாய அமைப்புகள் தன்னுடைய அங்கமான உறுப்பினரை அவர்களுடைய வயத்திற்கு அனுகூலமாக தன்னுடைய அந்தஸ்து மற்றும் பங்களிப்பை அளிக்கிறது. எ.காட்டாக குடும்பம் தன்னுடைய உறுப்பினர்களுக்கு வயதிற்கு தக்கவாறு உறவுமுறைகளை கொடுக்கிறது. எனவே சமுதாய அமைப்புகள் சமுதாய அமைப்பில் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் எல்லோருக்கும் பங்களிப்பை அளிக்கிறது.

**III. சமுதாய அமைப்புகளின் (பங்கு) பாத்திரம் மற்றும் செயல்கள் :**

ஒவ்வொரு சமுதாய அமைப்புகள் தன்னுடையதே ஆன செயல்களை செயல்படுத்தும். முதலில் குடும்ப செயல்களைப்பற்றி அறிவோம். குடும்ப சமுதாயத்தின் ஆரம்ப பிரிவு இது உலகத்தின் எல்லா மூலையிலும் செயலில் உள்ளது.

தனி நபர் சமுதாய செயல்பாடுகளில் பங்கு கொள்ள அவசியமாகப் தேவைப்படும் எல்லா செயல்களையும் நிர்வாகிக்கும் குடும்பத்தின் முக்கிய செயல்கள் கீழ்க்கண்டவாறு உள்ளது.

© KTBS Not to be republished

**குடும்பத்தின் செயல்கள் :**

1. **உறுப்பினர்களில் சமூக அந்தஸ்து :**

குடும்பம் தன்னுடைய உறுப்பினர்களுக்கு வெவ்வேறு உறவுமுறைகளை கொடுக்கிறது. இதற்கு அனுகூலமாக அவர்கள் குடும்பத்தில் வெவ்வேறு பங்கு வகிப்பார்கள். குடும்பம் தன்னுடைய எல்லா உறுப்பினரின் வளர்பிடம், குடும்பம் நாம் பிறந்தது முதல் நமது வளர்ப்பை பாதுகாக்கிறது. குடும்பத்தில் உள்ள தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா என்று ஒவ்வொரு நொடியும் நம்மை எச்சரிக்கையுடன் பார்த்துக் கொண்டு, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை நமது எல்லா தேவைகளையும் அளித்து வளர்க்கிறார்கள். வெறும் சிறியவரை மட்டும் வளர்ப்பதில்லை தன்னுடைய எல்லா உறுப்பினரையும் அவர்களுக்கு தேவைப்படும் போது வளர்க்கிறது. எ.கா. குடும்ப உறுப்பினர்களில் யாராவது உடல்நிலை பதிப்படைந்துபோனால், பெரியோர்களின் மூப்பு காலத்தில் முடியாமல் போனால் அவருடைய குடும்பம் அவரை கவனித்துக் கொள்ளும்.

2. **பாதுகாப்பு மற்றும் சமுதாய தன்மை :**

குடும்ப உறுப்பினர் குழந்தைகள் சமுதாயத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேணடும் என்று சமுதாயத்தின் மூலம் குடும்பம் கற்பிக்கிறது. இதனுடன் தம்முடைய எல்லா உறுப்பினர்களுக்கும் சமுதாய பாதுகாப்பை அளிக்கிறது என்றால் குழந்தைகளுக்கு கல்வி, ஆரோக்கியமற்ற செயல்களில் பாதுகாத்தல், வேலைவாய்பபு, செய்யும் போது ஒத்துழைப்பு, திறமையை வெளிப்படுத்தல்.

3. **திருமணச் செயல்கள் :**

*அ) சமுதாய அனுமதி :*

திருமணம் ஒரு முக்கியமான சமுதாய அமைப்பாக உள்ளது. திருமணம், ஆண் மற்றும் பெண் கூடி வாழ்வதற்கு சமுதாய அமைப்பின் அனுமதி பெற்றுக் கொள்ளும் செயலாகும். திருமணம் ஆண், பெண் சேர்ந்து வாழ சமுதாய அனுமதி கொடுக்கிறது. திருமணம் ஆண் பெண்ணிற்கு குடும்ப வாழ்க்கையில் ஈடுபட அனுமதி கொடுக்கிறது. திருமணம் என்ற உறவின் மூலம், ஆண், பெண் ஒரு குறிப்பிட்ட வீட்டில் மிகுந்த உறுதியாக நிலை கொண்டு சமய, பொருளாதார, சமுதாய, கலாச்சாரத்தோடு வாழ்க்கை நடத்த வழி வகுக்கும். மனித நாகரிகத்தை போன்று திருமணம் மிகவும் பழமையானது திருமண அமைப்பு. அன்றிலிருந்து தொடர்ந்து வளர்ந்துவந்துள்ளது. அவ்வாறு இந்த அமைப்பு பல மாறுபாடுகளையும் கொண்டுள்ளது.

*ஆ) குடும்பத்தின் அடித்தளம் :*

திருமணம் குடும்ப அமைப்பு உருவாவதற்கு உற்சாக மூட்டுகிறது. சந்தான தோற்றம், மற்றும் குழந்தை வளர்ப்பு, சமுதாயத்தின் செயல்பாடுகள் குடும்பத்தின் உதவியோடு நடைபெறும். குழந்தைகள் பிறந்த உடனும் திருமண உறவுதொடரும். குடும்பத்தில் எல்லாவித தொடர்புகளையும் இயக்கும் தன்மை திருமணத்திற்குண்டு. திருமணச் சம்பந்தின் விளைவாக

©KTBS Not to be republished

அனேக சந்தர்ப்பத்தில் ஒன்று சேர்ந்து இருக்க உதவி புரிகிறது. திருமணம் பல்வேறு சமுதாய மக்களை ஒன்று சேர்ப்பதின் மூலம் அவர்களிடத்தில் நாம் எல்லோரும் ஒன்றே என்கின்ற எண்ணத்தை உருவாக்கி ஒற்றுமைக்கு வழி வகுக்கிறது.

**இ) உறவுகளில் சட்ட பாதுகாப்பு :**

திருமணம் வெறம் கணவன் மனைவியின் உறவு மட்டுமின்றி அவருடன் வீட்டின் மற்ற உறுப்பினர்களின் உறவை ஏற்படுத்துகிறது. இங்கு பிறந்த குழந்தை தன்னுடைய அப்பா, அம்மாவின் குடும்பத்தின் சொத்துக்கு வாரிசாக இருக்கும். சமுதாயத்தின் நிலைப்பாட்டிற்கு குடும்பத்தின் மூலம் திருமண அமைப்பு முறையில் வாரிசுரிமை, மற்ற விசயங்களுக்கு சட்ட அங்கீகாரம் கூட உள்ளது.

**4. திருமணம் குடும்ப பங்கை வகிக்கிறது.**

அ) திருமணம் குடும்பத்தில் தம்பதியர்கள் மற்றும் உறுப்பினர்கள் வகிக்கக்கூடிய பங்கு, பொருப்பு, செயல்கள், உறவுகளை தன்னுடைய உறுப்பினர்களுக்கு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் கொடுக்கிறது.

ஆ) சமயத்தின் செயல்பாடுகள் : எல்லா சமுதாயத்திலும் காணப்படும் மற்றொரு சமுதாய அமைப்பு என்றால் அது சமயம். மனிதனின் நாகரீகத்துடனே சமயம் தோன்றியுள்ளது. இது சமுதாயத்தின் முக்கிய அங்கம். சமயத்தின் சில செயல்கள் கீழ்ககண்டவாறு உள்ளன.

1. **சமயம்சமுதாயதன்மைக்குமிகமுக்கியபங்குவகிக்கிறது.** சம்பிரதாயங்கள், சமய விதிகள் மற்றும் கடைபிடித்தல், மூலம் சத்தியத்தை கடைபிடித்தல், உதவி செய்தல், தியாகம், அமைதி முதலியவைகளின் பிரசாரத்தில் சமயம் உதவுகிறது.
2. **சமூக ஒருமைப்பாடு :** சமயம் சமூக ஒருமைப்பாட்டிற்கு காரணமாக உள்ளது. உண்மை, அகிம்சை, உண்மைத் தன்மை போன்றவை சமயத்தின் மதிப்பாக இருந்து இந்த மதிப்புகள் சமூக ஒருமைப்பாட்டை காக்க உத வுகிறது. சம்பிரதாயங்களில் இருக்கும் வேறுபாடு ஒருமைப்பாடு மற்றும் குறியீடுகளின் பயன்பாடு போன்றவை மக்களிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்துகிறது. இது சமயத்தின் விருப்பமாகும். இதன்படி நடந்தால் சமய ஒற்றுமை இருக்கும்.
3. **மதிப்பை பாதுகாத்தல் :** உண்மை தன்மை, நியாயம், சம உரிமை, அகிம்சை முதலிய சமுதாய மதிப்பை காப்பாற்றி கொண்டு வர சமயம் ஒரு கருவியாக விளங்குகிறது. இவை எல்லா சமயங்களும் போற்றும் ச ாதாரண மதிப்பேயாகும்.
4. **சமுதாய கட்டுப்பாடு :** சமயம் சமுதாய கட்டுப்பாட்டின் மிக முக்கிய சாதனமாகும். அது தெய்வம் மற்றும் ஆன்மீகத்தின் மறுபக்கத்தை

©KTBS Not to be republished

உருவக்குவதின் மூலம் மனிதனின் செயல்பாட்டை கட்டுப்படுத்து கிறது. நாம் உண்மையாக இருக்கவும், ஒழுக்கமாக இருக்கவும் மற்றும் சமுதாயத்ததின் சமூகவாதியாக இருக்கவும் சமயம் நமக்கு உதவுகிறது. சமயத்தின் இந்த விருப்பத்தை புரிந்து கொண்டு பரஸ்பரம் பகைமையை விட வேண்டும்.

## பயிற்சி :

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

*1. சமுதாய அமைப்புகள் .......... விருப்பங்களை நிறைவேற்றுகிறது.*

*2. குடும்பம் ஒரு ............. அமைப்பு.*

*3. திருமணம் ஒரு ................ அமைப்பு.*

*4. மனிதன் தன்னுடைய ........... நிறைவேற்றிக் கொள்ள உருவாக்கி கொண்டுள்ள அமைப்பே சமுதாய அமைப்பு.*

**II. கீழ்க்காணும் வினாக்களுக்க ஒரு வரியில் விடையளி:**

*1. சமுதாய அமைப்பு என்றால் என்ன?*

*2. குடும்பச் செயல்களை கூறுக.*

*3. சமுதாய அமைப்பின் குணங்கள் யாவை?*

*4. சமுதாய அமைப்பின் வகைகள் யாவை?*

**III. கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கைந்து வரிகளில் விடை தருக.**

*1. சமுதாய அமைப்பிற்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவுகளை விவரி.*

*2. சமுதாய அமைப்பான சமயத்தின் இலட்சியம் என்ன?*

*3. சமுதாய அமைப்பான குடும்பத்தின் செயல்பாடுகளை விவரி*

*4. சமுதாய அமைப்பான திருமணத்தைப் பற்றி குறிப்பு வரைக.*

**IV. செயல்பாடுகள் :**

*1. சமுதாய அமைப்புகளின் படத்தை மாணவர்களிடத்தில் சேகரி.*

*2. சமுதாய அமைப்பைப் பற்றி மாணவருடன் விவாதித்தல்*

*3. குடும்பச் செயல்களை மாணவர்கள் மூலம் செயல்படுத்தி சமுதாய அமைப்பின் மகத்துவம் அறிதல்.*

©KTBS Not to be republished